Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-1037)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 11 (13.06.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 252

## வெள்ளை நிற வானில் கடத்திச் சென்று சிறுவனைத் தாக்கிய முஸ்லிம் வர்த்தகர்!

### நேற்றுமுன்தினம் இரவு யாழ்.சிற்றி ஹோலருகே பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மத்தியில், சிறுவன் ஒருவன் வெள்ளை நிற ஹையேஸ் வாகனத்தில் வந்தோரால் கடத்திச் செல்லப்பட்டு, கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டான்.

யாழ்ப்பாணம், ஜும்மாப் பள்ளி வாசல் வீதியில் அமைந்துள்ள, சிற்றி ஹோலுக்கு முன்பாக வசிக்கும் இராசதுரை ரஞ்சித் (வயது 14) என்ற சிறுவனே, இவ்வாறு- கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளான்.

நேற்று முன்தினம்- நள்ளிரவு 12 மணியளவில சிறுவன் உறக்கத்தில் இருக்கும்போது- வெள்ளை நிற ஹையேஸ் வானில் வந்த பிரபல முஸ்லிம் வர்த்தகர் ஒருவர், தனது வாகனத்தைச் சிறுவனின் வீட்டு வாசலுக்கு அருகில் நிறுத்திவிட்டு- சிறுவனை அழைத்த வேளை, சிறுவனும், சிறுவனின் தாயாரும் வீட்டிலிருந்து வெளியில் வந்தனர்.

அப்போது - குறிப்பிட்ட பிரபல முஸ்லிம் வர்த்தகர் அச்சிறுவனைப் பிடித்து இழுத்து, தனது வாகனத்தில் ஏற்றி, ஐந்து சந்திப் பகுதியில் உள்ள மக்கள் நடமாட்டமற்ற வீடொன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவக் கெடுபிடிகளைக் கண்டித்து ஹர்த்தால்

## மட்டு,அம்பாறை மாவட்டங்கள் நேற்று முற்றாகச் செயலிழந்தன!

(கல்முனை)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அண்மைக்காலமாக இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் சோதனைகள் மற்றும் கெடுபிடிகள், அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் சத்தியராஜ் கைது செய்யப்பட்டமை போன்ற சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும்,

இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும்

(10 ஆம் பக்கம் பார்க்க)



வெறிச்சோடிய மட்டுநகர்ப் பகுதி

### வெளிநோயாளர் பிரிவு மூன்றாவது நாளாக ஸ்தம்பிதம் !



(யாழ்ப்பாணம்)

மருத்துவர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் யாழ். போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மூன்றாவது நாளாக நேற்றும் செயலிழந்து காணப்பட்டது.

அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் வடக்கு - கிழக்கில் பணிபுரியும் சகல வைத்தியர்களுக்கும் விசேட இடர்காலக் கொடுப்பனவுகளை வழங்கவேண்டும், ஆகிய இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து- நாடு முழுவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுத் தலைவர் இன்று வன்னிக்குச் செல்கிறார்!

### இராணுவக் கெடுபிடிகள் பற்றி புலிகள் எடுத்துரைப்பர்

(நமது நிருபர்)

**போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன் இன்று வன்னி செல்கின்றார். விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ள அவர் - தற்போதய பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பாகவும், போர்நிறுத்தம் பேணப்படுவதிலுள்ள சில பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாட இருப்பதாக, கண்காணிப்புக குழுப் பேச்சாளர் அக்னஸ் டோட்ரயர் தெரிவித்தார்.**

**இதேவேளை - இச்சந்திப்பில், அரசியல் நடவடிக்கைகளுக்காகச் செல்லும்போது இராணுவத்தினரால் கெடுபிடிக்குள்ளாக்கப்படும், தேவையற்ற விதத்தில் கைதாகித் தடுத்துவைக்கப்படும் போராளிகள் தொடர்பாக- விடுதலைப் புலிகள், கண்காணிப்புக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வருவார்கள் எனவும் தெரியவருகிறது.**

### சிறுவர்கள் இருவர் கைக்குண்டுகளுடன் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் கைக்குண்டுகளை எடுத்துச்சென்ற இரு சிறுவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பம்பலப்பிட்டியிலிருந்து தெஹிவளை நோக்கி கைக்குண்டுகளுடன் சென்று கொண்டிருந்த சமயமே, இவ்விரு சிறுவர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். (01)

### வடமராட்சி கடற்கரையில் புதிதாக காவலரண்கள்

வடமராட்சி கடற்கரைப் பகுதிகளில் கடற்படையினரின் பாதுகாப்பு மற்றும் கடற்கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன.

பொலிகண்டி தொடக்கம் தொண்டைமானாறு வரையான கடற்கரையை அண்டிய பகுதிகளில் படையினர் புதிதாகப் பல காவலரண்களை அமைத்து வருகின்றனர். இப்பிரதேச கடற்கண்காணிப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## எமது போராளியை விடுவித்தால் பொலிஸாரை விடுவிக்கத் தயார்!

### மட்டு-அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கிரிஷன்

(மட்டக்களப்பு)

அரசியற் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம், படையினரால் கைது செய்யப்பட்ட எமது போராளி சத்தியராஜ் என்பவர், உடனடியாக விடுவிக்கப்பட்டால் மட்டுமே, ஏறாவூரில் எம்மால் கைது செய்யப்பட்ட இரு பொலிஸ்ாரையும் நாம் விடுவிப்போம். இவ்வாறு- தாம் படை அதிகாரிகளுக்கு அறிவித்திருப்பதாக, மட்டக்களப்பு மாவட்ட துணை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கிரிஷன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள நிலைவரம் தொடர்பாக நேற்றிரவு நமது ஈழநாட்டுக்குத் தெரிவிக்கும் போதே- அவர் இவ்வாறு கூறினார்.

படைத்தரப்பிடமிருந்து, இதுவரை மேற்படி எமது போராளியை விடுவிப்பது தொடர்பாக எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை என்று கிரிஷன் அப்போது மேலும் தெரிவித்தார்.

படையினர் எமது போராளியை விடுவிக்காதவரை, நாமும் எம்மால் கைது செய்யப்பட்ட பொலிஸாரை விடுதலை செய்யமாட்டோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கை துண்டாடிய நிலையில் பற்றைக்குள் கிடந்த நபர்!

### மருதனார்மடத்தில் நேற்று பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடத்தில் உள்ள சபாபதி நலன்புரி நிலையத்துக்கு அண்மையில் உள்ள பற்றை ஒன்றில் இருந்து - கை துண்டிக்கப்பட்டும், உடலில் வெட்டுக்காயங்களுடனும் நபர் ஒருவர் மீட்கப்பட்டிருக்கிறார்.

மயங்கிய நிலையில் காணப்பட்ட இவரை, சுன்னாகம் பொலிஸார் மீட்டெடுத்து - யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

நாகப்பன் என்று அழைக்கப்படும் நாகமுத்து நாகேந்திரம் (வயது 42) என்பவரே இவ்வாறு வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டிருக்கிறார்.

இவர் மீட்டெடுக்கப்பட்ட இடத்திலிருந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அடுத்த நகர்வு என்ன? இராஜதந்திரிகளிடையே பரபரப்பு!


(கொழும்பு)

அரசுடனான பேச்சுவார்த்தை மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாக, விடுதலைப் புலிகளின் அடுத்த நகர்வு என்ன என்பது குறித்து அறிந்து கொள்வதற்கு கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் பரபரப்புடன் கூடிய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ரோக்கியோ மாநாட்டில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்ட ஆலோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்ததைத் தொடர்ந்து கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் மேற்படி பரபரப்பு நிலை தோன்றியுள்ளது.

அரசுடனான அமைதி முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்களை விடுதலைப்புலிகள் தரப்பில் தோற்றுவிக்க- அரசு முனையுமா என்பது குறித்தும், இவ்வாறான சூழலை தோற்றுவிப்பதற்கு அரசு, புலிகள் தரப்பினர்களிடமிருந்து மீள் முயற்சிகள் எதுவும் எடுக்கப்படுமா என்பது குறித்தும் அறிவதில் இராஜ தந்திரிகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். (200)

### விண்ணாணம் விநாசியர்



வெள்ளை வான் இப்ப உதுக்கும் ஃபஷனாச்சு..!

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# கூட்டமைப்புத் தொடர்பாக ஆனந்தசங்கரி சிறுபிள்ளைத்தனமாக கருத்து வெளியிடுகிறார்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கண்டனம்

கட்சிகள் என்பது - மக்களின் நலன்களைக் கவனிக்கவும், அவர்களின் அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றவுமே தவிர - அது தனிப்பட்ட நபர்களின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அல்ல, என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு - தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி எழுதிய பகிரங்கக் கடிதத்திற்கு, ஈ.பி.ஆர்.எல்.எப் (சுரேஷ் அணி) செயலாளர் சுரேஷ பிரேமச்சந்திரன் அளித்துள்ள பதில் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆனந்தசங்கரி, ஊடகங்கள் மூலம் கடந்த 30 ஆம் திகதி ஓர் கடிதத்தை பிரசுரித்திருந்தார். கட்சிக்குள் தனக்கேற்பட்டிருக்கும் நெருக்கடியை பகிரங்கப்படுத்துவதும், தனது கட்சியின் அனுதாபிகளுக்கு இதனைத் தெரியப்படுத்துவதன் மூலம், அவர்களது ஆதரவையும், அனுதாபத்தையும் பெற்றுக்கொள்வதே அதன் நோக்கமாக இருக்கலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உள்விவகாரங்களில் தலையிடுவதோ இல்லையேல் சங்கரியின் அனுதாபம் தேடும் முயற்சியை முறியடிப்பதோ எமது நோக்கமல்ல. மாறாக தனக்கு அனுதாபம் தேடும் முயற்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) போன்ற இயக்கங்களை கீழ்த்தரமாக விமர்சித்திருப்பதுடன், தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற மக்களின் விருப்பத்திற்கு விரோதமாகவும், கூட்டமைப்புக்கு விரோதமாகவும் சில முத்தான கருத்துக்களையும் உதிர்த்துள்ளார்.

அது மாத்திரமல்லாமல், கூட்டமைப்பானது - கூட்டணியைச் சிதைப்பதற்காக உருவாக்கப்பட்டது, என்ற மிகத்தவறான கருத்தையும் இவர் முன்வைத்துள்ளார். 50 வருட பழைமை வாய்ந்த அரசியல்வாதி, அனுபவமுதிர்ச்சி, அரசியலில் தெளிவு, கொள்கைவாதி எனத் தன்னைப் பற்றி தனது அனுதாபிகளுக்கு கூறுவதற்கு சங்கரி முயன்றுள்ளார். அவரின் முயற்சி பிழையானதல்ல ஆனால், ஓர் ஐக்கிய முன்னணி தொடர்பாக, அதன் தேவை தொடர்பாக எதுவித விளக்கமுமற்று, சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை வெளியிட்டதானது, அரசியல் முதிர்ச்சி அடிப்படையிலா? அல்லது அனுதாபிகளை ஏமாற்றும் முயற்சியா? என்பதுதான் புரியவில்லை.

"கூட்டமைப்பை உருவாக்குவதில் சிறிதளவும் எனக்கு விருப்பமில்லை" என்று கூறியுள்ள அவர், அதற்குக் காரணமாக கூட்டமைப்பிலுள்ள சக அமைப்புகள் மீது பொதுவாக, பல்வேறு குற்றங்களை சுமத்தியுள்ளதுடன், தமிழர் விடுதலைக்கூட்டணியை அழிக்கத் துடிப்பவர்கள் என்றும் குற்றஞ்சுமத்தியும் உள்ளார்.

மேலும், கூட்டமைப்புப் பற்றிய கருத்துக்களும், விளக்கங்களும், தேர்தலையும், நாடாளுமன்ற ஆசனக் கணக்குகளையும் மையமாக வைத்தே வெளியிடப்பட்டுள்ளது. அதிலும், யாழ். மாவட்டத் தேர்தலை மையமாக வைத்தே, அவரின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

முடிவற்ற போரினால் வட - கிழக்கு மக்களும், பிரதேசமும், மொததமாக அழிந்து இந்நாட்டில் தமிழினத்தின் எதிர்காலமே கேள்விக்குள்ளாகிவிடுமோ? என்ற அச்சம், தமிழ் மக்கள் மனதிலும் பெருமளவிலான தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மத்தியிலும் வளர்ந்து வந்தது. இந்நிலையில், மக்களைப் பற்றி பிடித்திருந்த இராணுவ கெடுபிடிகள் மற்றும் அகதி வாழ்க்கையை அகற்றி, வாழ்க்கையின் தேவைகளைப் பெற்றுக்கொடுக்கவும், ஓர் உறுதியான, நிரந்தரமான அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவும், தமிழ்த் தலைமைகள் ஒரே குரலாய் ஒலிக்க வேண்டிய தேவை, கடந்த 20 ஆண்டுகளாக அதிகரித்து வந்துள்ளமை அனைவரும் உணர்ந்ததே.

குறிப்பாக - ஜனாதிபதி சந்திரிகாவின் மீதிருந்த நம்பிக்கை பொய்த்த பின், தனித்து நின்று தமிழ்க் கட்சிகளால் அரசுக்கு உறுதியான அழுத்தத்தைக் கொடுக்க முடியவில்லை என்பதுடன், தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பதை சாதகமாகப் பயன்படுத்தி தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏமாற்றி, இழுத்தடிக்கும் அரசின் அணுகுமுறைக்கு முடிவு கட்டவேண்டிய தேவையும் இருந்தது. அதேவேளை, போரை முன்னிலைப்படுத்தும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அரசியற் தீர்வை முன்னெடுக்க புலிகளுடன் பேசுமாறு அரசுக்கு சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம், கடந்த பல ஆண்டுகளாக அதிகரித்து வந்தது.

கட்சிகள் என்பது - மக்களின் நலன்களை கவனிக்கவும், அவர்களின் அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றவுமே தவிர, சில தனிப்பட்ட நபர்களின் விருப்பு, வெறுப்புக்களை நிறைவேற்றிக்கொள்ள அலல என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இதனடிப்படையில் தமிழ்க் கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக பரிணமிப்பதோ அல்லது வேறு ஒரு பெயரில் உருவாகுவதோ ஒன்றும் தவறான காரியமல்ல. தமிழரசும், காங்கிரசும் இணைந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது காலத்தின் தேவை. அதேபோல் திம்பு மாநாட்டில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழ புரட்சிகர அமைப்பு ஆகியவை இணைந்து நான்கு கோரிக்கைகளை முன்வைத்தன. அதுதான் ஈழத்தமிழரின் வரலாற்றில் முக்கியமானது.

- தமிழ் மக்கள் ஓர் தனித்தேசிய இனம்.

- வட - கிழக்கு அவர்களின் தாயகம்.

- தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு.

- சகல மலையக மக்களுக்கும் வாக்குரிமை, குடியுரிமை வழங்கப்படவேண்டும் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கைகளாகும்.

இக்கோரிக்கைகள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி போன்றவற்றாலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தமான தமிழ் மக்களின் கோரிக்கைகளாக அமைந்தன.

அவற்றை வென்றெடுப்பதற்கான இந்த இறுதிக்கட்டத்தில், நாம் கூட்டாக இணைந்து செயற்படுவது காலத்தின் தேவையா? இல்லையா? என்பதை, கூட்டணியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் சிந்திக்கவேண்டிய நேரமிது.

தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை வென்றெடுக்கக் கூடிய, அதற்காக அரசியற் பலத்தையும் கொடுத்து, எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டாமா? நாங்கள் பிரிந்து நிற்பது என்பது ஆளும் கட்சிக்கும், அரசாங்கத்திற்கும்தான் சாதகமாய் இருக்கும். இவற்றை ஏன் சங்கரியும் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களும் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

"கூட்டமைப்பின் பங்காளிகள், 2000 ஆம் ஆண்டு தேர்தலில் பெற்ற வாக்குகள் மிகக் குறைந்த அளவே. நாம் அமைத்த கூட்டமைப்பால், 2001 ஆம் ஆண்டு தேர்தலில் பயனடைந்தவர்கள் அவர்களே அன்றி நாம் அல்ல, மீண்டும் யாழ். தேர்தல் மாவட்டத்தில் கிடைத்த ஆசனங்கள் 03 மட்டுமே. கூட்டமைப்பு உருவாகாது இருந்திருந்தால், தாம் மேலும் சில ஆசனங்களைப் பெற்றிருப்போம்." 2001 ஆம் ஆண்டு தேர்தல் தொடர்பான சங்கரியின் கணிப்பீடு இது. ஆனால், 1977 ஆம் ஆண்டு த.வி. கூட்டணி 17 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்தபின், முதன் முறையாக - 2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 15 பிரதிநிதிகளை தெரிவுசெய்தது.

ஒழுங்கான வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தால், நாம் மூன்றாவது பலமான கட்சியாக பாராளுமன்றத்தில் அமர்ந்திருப்போம். பிரிந்து நின்று கேட்டு முன்னர் திருமலை, அம்பாறையை இழந்திருந்தோம். கூட்டாகக் கேட்டதால் மீண்டும் அதனைக் கைப்பற்றினோம். கூட்டமைப்பு வலுப்பெறும் பட்சத்தில், எதிர்காலத்தில் 20 அங்கத்தவர்களைக் கொண்ட, பலமான நாடாளுமன்றக் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படமுடியம் என இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# IN MEMORIAM
## 94 Birth Day



13.06.2003
Of
V.M.CUMARASWAMY
(Retd.District Judge Mallakam)

நினைவு கூறுகிறோம்,
கு. விசுவலிங்கம் குடும்பம் மற்றும் உற்றார் உறவினர்கள்.

(377)



பாலைவனச் சோலை ஊழியம் நடத்தும்

# இயேசுவின் இன்பப் பெருவிழா

| இடம் | திகதி | நேரம் |
|---|---|---|
| மானிப்பாய் செல்லமுத்து மைதானம் | ஆனி (ஜுன்) மாதம் 12, 13, 14, 15 | பிற்பகல் 4.30 மணி |

தேவ செய்தியாளர் :

சகோதரி. பத்மா முதலியார்



சிறப்புப் பாடல்கள்: சகோ. ஜான்ஜேபேஸ் & குழுவினர்

பாவம், வியாதி, பில்லி சூனியம், கடன் பாரம் இவைகளிலிருந்து உடனே விடுதலைபெற குடும்பமாக வாருங்கள்!

கூட்ட முடிவில் ஜெப எண்ணெய் இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு: ஆனி (ஜுன்) மாதம் 13, 14, காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் ஊழியர்கள் விசுவாசிகளுக்கான வேதபடிப்பு நடைபெறும்.

இயேசு இன்றும் அற்புதம் செய்கிறார்!

அனுமதி இலவசம்!!

(சி-1073)

தொடர்பு - யாழ். குடா ஊழியர் ஐக்கியம் 222-3653, 222-2930, 222-3286


## மழலைகள் பூங்கா விளையாட்டு விழா

குப்பிளான் தெற்கு, அறிவொளி சனசமூக நிலைய மழலைகள் விளையாட்டு விழா, நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## சிரமதானமும் மரம் நாட்டலும்

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள், உத்தியோகத்தர்களினால் - சாவகச்சேரி நகரசபையை அண்டிய பகுதிகளில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டதோடு, மரக்கன்றுகள் பலவும் நாட்டப்பட்டன. (29)

## மட்டுவிலில் இன்று தேர்த்திருவிழா

மட்டுவில் வடக்கு, அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இன்று தேர்த்திருவிழாவும், நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (24)

## மதிப்பீட்டுப் பரீட்சை

(காரைநகர்)

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும், இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதர மாணவர்களுக்கான- விசேட கணித செயற்திட்டத்தின் கீழ கல்வி கற்கும் தீவக வலயப் பாடசாலை மாணவர்களுக்கான, முதலாவது மதிப்பீட்டுப் பரீட்சை திட்டமிட்டபடி - இன்று காலை 10.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை நடைபெறும் என தீவகக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (52)

## திருத்தம்

நேற்றைய, நமது ஈழநாட்டுப் பத்திரிகையின் 2 ஆம் பக்கத்தில், 'யாழ்ப்பாண மாநகரசபைக்கு நீர் வழியோகம் சம்பந்தமான பொருட்கள் கூறுவிலைகோரல் - 2003' எனும் விளம்பரத்தில்- **நீர் வேலைப் பகுதி** என்பது, நீர்வேலிப் பகுதி எனத் தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.


## சிறு விளம்பரம்

### வேலையாள் தேவை

இல. 226 யாழ். கே.கே.எஸ். வீதியில் உள்ள ரஹ்மான் ஹோட்டலுக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். (376)

### மணமகன் தேவை

யாழ். இந்து உயர்குல 5'4" உயரம் உள்ள 1965 இல் பிறந்த, செவ்வாய் குற்றம் அற்ற ஆசிரியைக்கு பண்பான மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 13, மே/பா நமது ஈழநாடு, 267. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (379)

### மணமகள் தேவை

வடமராட்சி பகுதியில் சொந்த வியாபாரம் செய்யும் சைவ சமயத்தைச் சேர்ந்த 32 வயதுடைய மணமகனுக்கு நல்ல குடும்பப் பண்பான உயர் குலத்தை சேர்ந்த மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 12, மே/பா நமது ஈழநாடு, 267. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (378)

### பல் கட்டுதல்

பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல் நல்லமுறையில், நியாய விலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், இல. 05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக்முன், யாழ்ப்பாணம். (சி-1073)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, நம்பியார், நாகேஸ்
ரகசியபொலிஸ் 115
2.30, 6.30 மட்டும்
THE ROCK, THE SCORPION KING
இன்று மட்டும் - காலை 10.30, இரவு 9.30
15 முதல் சரத்குமார், மீனா
பாறை
(சி-973)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சாலினி, தாமு, ராதாரவி நடித்த
காதலுக்கு மரியாதை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே)
BEHIND ENEMY LINE
(சி.974)

# விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது பற்றி சர்வதேச நாடுகள் கவனத்தில் எடுக்கவேண்டும்!

## ரோக்கியோவை மையமாகக் கொண்ட அமைப்புகள் கோரிக்கை

(ரோக்கியோ)

**விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க, சர்வதேச மற்றும் சிவில் சமூகங்கள் உதவவேண்டும் என்றும்- புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து, சர்வதேச நாடுகள் கவனத்தில் எடுக்கவேண்டும் என்றும் -**

**சகல ஒடுக்குமுறைகள் மற்றும் இனத்துவேஷங்களுக்கு எதிரான அமைப்பும், மதங்களுக்கிடையில் அமைதிக்கான நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

ரோக்கியோவை மையமாகக் கொண்டு செயற்படும் இந்த அமைப்புக்கள், ரோக்கியோவில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பின்னர், வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் அமைதி முயற்சியில் மிகப்பெரிய பங்காளர்களான புலிகள், ரோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளாமை கவனத்தில் கொள்ளத்தக்க ஒரு செயல்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தினைச் செயற்படுத்துவதில், அரசியல் ரீதியான பொறுப்புணர்வை அரசாங்கம் காட்ட வேண்டும்.

ரோக்கியோவில் நடைபெற்ற இந்த உதவி வழங்கும் மாநாடு, உலகமயமாக்கல் நிலைப்பாட்டுக்குள் இலங்கையையும் சிக்கிக்கொள்ள வைத்திருக்கிறது. உலகவங்கியின் வழிகாட்டலில்தான் இப்போது இலங்கை சென்றுகொண்டிருக்கிறது.

இதனால் - நாட்டின் வறுமை, வேலையில்லாப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியவில்லை. ஐ.நா.அபிவிருத்தித்திட்ட அறிக்கையின்படி, உலகில் - ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துவருகிறது.

உலகவங்கியும், ஏனைய சர்வதேச நிறுவனங்களும், 'இலங்கையை மீளமைத்தல்' என்ற திட்டத்தினை வைத்து, அரசாங்கத்தை அதன்படியே வழிநடததுவதில் அக்கறை செலுத்துகின்றன.

இலங்கையில் இனப்பிரச்சினை மட்டுமின்றி - ஊழலும், அரசியல் மயப்படுத்தப்பட்ட தீர்மானிக்கும் மட்டங்களும், திட்ட அமுலாக்கல் குறைபாடுகளும் பொதுமக்களைப் பெரிதும் பாதித்துள்ளன.

சந்தைப் பொருளாதாரத்தை நிலைநிறுத்த, அரச நிறுவனங்கள் சர்வதேச நிறுவனங்களிடம் கையளிக்கப்படுகின்றன. விவசாய, மீன்பிடி வளர்ச்சி தடுக்கப்பட்டுள்ளது என, அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் சகல ஒடுக்குமுறைகள் மற்றும் இனத்துவேஷத்துக்கு எதிரான அமைப்பின் தலைவர் நிமல்கா பெர்ணாண்டோ, செயலாளர் ஹிதேகி மொறிகரா மற்றும் மதங்களுக்கிடையிலான சமாதானத்துக்கான அமைப்பின் தலைவர் வண. அஸஜி தேரோ ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

(க)

## ஆசிய நாயகன் விருது

(ரோக்கியோ)

'ரைம்' சஞ்சிகையின் ஆசிய நாயகன் விருதைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சார்பில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பெற்றுக்கொண்டார்.

ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உடனடியாக நாடு திரும்பியதால், அவர் அந்த விருதை நேரடியாகப் பெறவில்லை 'கிரான்ட் ஹயாட்' ஹோட்டேலில் நடந்த வைபவத்தில் அமைச்சர் பீரிஸ் இந்த விருதைப் பெற்றுக் கொண்டார்.

## பிந்துனுவெவ படுகொலை தீர்ப்பு ஜூலை 1 ஆம் திகதி

(கொழும்பு)

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம் பெற்ற படுகொலைகள் தொடர்பான, தீர்ப்பு ஜூலை முதலாம் திகதி வழங்கப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் என, முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் - இறுதி அறிக்கை தொகுப்பில் ஏற்பட்ட தாமதத்தினால் இத்தீர்ப்பு வழங்கப்படுவது ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி பிந்துனுவெவ தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 26 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட இந்த வழக்கில், 41 பேர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இவர்களில் 23 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாளொன்றுக்கு ஐந்து கோடி ரூபாவை ஹெரோயினுக்கு செலவிடும் இலங்கையர்!

இலங்கையில் நாளென்றுக்கு போதைவஸ்து பாவிப்போரால், ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் பயன்படுத்தப்படுவதாக, பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகம் அறிவித்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகப் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயசுந்தர, இது குறித்து தகவல் வெளியிடுகையில் போதைப்பொருள் பாவனையாளர் ஒருவரால், சராசரி நாளொன்றுக்கு ஹெரோயின் போதைப்பொருளுக்காக 500 ரூபா செலவிடப்படுகிறது. நாடுமுழுவதும் ஒரு இலட்சம் பேர் ஹெரோயின் பாவனையாளர்களாக உள்ளனர். இவர்களில் 10 ஆயிரம் பேர் கொழும்பு நகரில் மாத்திரம் இருக்கின்றனர்.

அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த, பொலிஸார் போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தைப் பிரகடனம் செய்துள்ளனர். எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை போதை பொருள் தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.



ஜெயவர்த்தனபுர பல்கலைகக்கழகத் துணைவேந்தரைப் பதவி விலகக் கோரி ஜே.வி.பி. சார்பு மாணவர்கள் போராட்டம் நடத்தியபோது - முன்னர் ஜே.வி.பியினரால் குழு மோதல் ஒன்றில் கொல்லப்பட்ட மாணவர் ஒருவரின் தாயார் - அவர்களை எதிர்த்து வாதிடுவதைப் படத்தில் காணலாம்.

# இந்தியாவிலிருந்து திரும்பும் மக்களை மீளக்குடியமர்த்த வழி செய்யுங்கள்!

## மன்னார் படையதிகாரிகளிடம் செயலக அதிகாரி வேண்டுகோள்

தலைமன்னார் கடற்படைத் தளத்திலிருந்து நூறு மீற்றருக்கு அப்பால் பொதுமக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்குவதாகக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே கடற்படையினரின் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும், படையினர் வசம் உள்ள - பொதுக்கட்டடங்கள், பொதுமக்களின் வீடுகள் தொடர்பாகவும் ஆராய, இந்த உயர்மட்டக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் - மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திஸ்ஸ கரலியத்த, வன்னிப் பிராந்திய துணை இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராச்சி, மன்னார் மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி பிரிகேடியர் கே.எஸ்.பெர்னாண்டோ, புனாவ கடற்படைத்தள கட்டளை அதிகாரி - கொமாண்டர் சில்வா, தலைமன்னார் கடற்படைத்தள கட்டளை அதிகாரி - கொமாண்டர் எஸ்.ஏ.வீரசிங்க, மற்றும் மன்னார் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலிலே, தலைமன்னார் கடற்படைத் தளத்தில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால் பொதுமக்கள் மீளக்குடியமர அனுமதிக்க முடியும் என்று, தலைமன்னார் கடற்படைத் தளக் கட்டளை அதிகாரி கொமாண்டர் எஸ்.ஏ.வீரசிங்க தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய, மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்-

கடந்த இருபது வருடங்களாக பொதுமக்கள் துன்பங்களின் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்பவர்கள், எமது மக்களும் சுமூகமான வாழ்வு வாழ இடமளிக்கப்பட வேண்டும்.

மன்னாரில் - பொதுமக்களின் வீடுகள், சொத்துக்கள் தொடர்ந்தும் படையினரின் பாவனையில் உள்ளன. அவற்றைப் படையினர் உடனடியாக பொதுமக்களிடம் கையளித்து, அவர்கள் சொந்த மண்ணில் தமது இயல்பு வாழ்வைக் கட்டியெழுப்ப உதவ வேண்டும் என்றும், படையதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அநேகமாக இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றனர். சில கிராமங்களில் இருந்த மக்கள் அனைவருமே இந்தியாவுக்குச் சென்றனர். இவர்களில் பலர் இப்போது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

ஆனால், இவர்களால் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியாத நிலை நிலவுகிறது. இவர்களின் - வீடுகள், சொத்துக்கள் படையினரின் பாவனையில் இருக்கின்றன. இதனாலேயே, இந்தியாவிலிருந்து திரும்பும் மக்கள் மீளக்குடியமர முடியாதுள்ளது.

இவ்வாண்டு ஜனவரி முதல் மே மாதம் வரை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த, 242 குடும்பங்களைச் சேர்ந்த - 502 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் மீளக்குடியமர முடியாத நிலை நிலவுவதாக இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மன்னார் மாவட்ட செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில், படையினர் தங்கியுள்ள கட்டடங்கள் பற்றிய விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

# செங்கல்பட்டிலுள்ள விசேட தடுப்பு முகாமை செய்யாறுக்கு மாற்ற ஜெயலலிதா உத்தரவு!

(சென்னை)

சென்னைக்கருகிலுள்ள செங்கல்பட்டில், இயங்கி வந்த விசேட தடுப்பு முகாமை செய்யாறு விசேட துணை ஜெயிலர் அலுவலக வளாகத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள செய்யாறு பகுதிக்கு, இந்த விசேட முகாம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காகவே இந்த இடமாற்றம் இடம்பெற்றுள்ளதாக தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கல்பட்டு விசேட முகாமில், இலங்கையைச் சேர்ந்த அகதிகள் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

வேலூர், மேலூர் போன்ற இடங்களிலும், இலங்கைத் தமிழர்களுக்கான விசேட தடுப்புமுகாம்கள் இயங்கிவருகின்றன.

இங்கு இளைஞர்கள் மட்டுமன்றி வயதானவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அகதி முகாம்களில் இருந்த பலர், சந்தேகத்தின் அடிப்படையில் இந்த விசேட முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். பாதுகாப்பு காரணங்களுக்காக, செங்கல்பட்டு முகாமை செய்யாறுக்கு மாற்றுமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு செங்கல்பட்டு விசேட முகாமை செய்யாறுக்கு மாற்றுவதால், அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்போர், தமது குடும்பத்தினருடன் தொடர்புகொள்ள முடியாத நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

செங்கல்பட்டு விசேட முகாம் சென்னைக்கு அருகாகவும், ரயில் போக்குவரத்து வசதியுடையதாகவும் உள்ள இடத்தில் அமைந்துள்ளது. செய்யாறுக்கு போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாக உள்ளதால், உறவினர்கள் வந்து பார்வையிடுவது பெரும் கஷ்டமானதெனக் கூறப்படுகின்றது.



செங்கல்பட்டு விசேட தடுப்பு முகாமில் 20 பேருக்கு மேல் எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெயவர்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தரை பதவி நீக்குமாறு ஐயாயிரம் மாணவர்கள் மகஜர்!

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைகழக துணைவேந்தரைப் பதவி விலகுமாறுகோரி, ஐயாயிரம் மாணவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

ஐயாயிரம் மாணவர்கள் ஒப்பமிட்ட இந்த மகஜர் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம், பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினால் நேரில் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரைக் கையளித்த மாணவர் சங்கத் தலைவர் ரவீந்திர முதலிகே, துணைவேந்தர் சர்வாதிகாரத்தனத்துடன் மாணவர்களை நடத்துவதாகவும், அவர் தனது பதவியைத் துஷ்பிரயோகம் செய்வதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இதனால், வேறு பொருத்தமான ஒருவரை இந்தப் பதவியில் நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

# கலாசார விழுமியங்களை மதித்து இளைஞர்கள் நடக்க வேண்டும்!

## தெல்லிப்பளை கோட்டப் பொறுப்பாளர் தெரிவிப்பு

இளைஞர்கள் - பண்பாட்டு கலாசார விழுமியங்களை மதித்து, சமூக விரோத செயல்களை இடைநிறுத்தி நடக்கவேண்டும் என தெல்லிப்பளை, உடுவில் கோட்ட அரசியல் துறைபொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது குறிக்கோள் அற்று இளைஞர்கள் குழுக்களாக வீதிகளில் - மோட்டார் சைக்கிள்களில் திரிவதும், கூடி நின்று கதைப்பதும், பாடசாலை மாணவிகள் மற்றும் வீதியால் செல்லும் பெண்பிள்ளைகளுடன் தகாத வார்த்தைகள் பேசுவதும், மதுபோதையில் தமது கைவரிசைகளை காட்டுவதும் குறித்து பொதுமக்கள் பல்வேறு முறைப்பாடுகளை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, தாவடி - உப்புமடம் பிள்ளையார் கோவிலடி, இணுவில்-மணிக்கூட்டுக்கடையடி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவுள்ள பஸ்தரிப்பு நிலையம், றொடடியாலடி போன்ற இடங்களில் மாலை நேரங்களில் மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள் சகிதம் கூடி நிற்கும் இளைஞர்கள் அவ்வாறு நிற்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மீறுவோர் மீது - பொது மக்களாலும் பொது அமைப்புகளாலும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெல்லிப்பளை - உடுவில் கோட்ட அரசியற்துறை பெறுப்பாளர் தெரிவித்தார்.

# 15 மில்லியன் ரூபா செலவில் பாடசாலைகளுக்கு தளபாடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு, தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக - "நிகோட்" நிறுவனம், பதினைந்து மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி - மாணவர்களுக்கான 9745 தளபாடங்களையும், ஆசிரியர்களுக்கான 550 தளபாடங்களையும் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை - பாடசாலைகளின் திருத்த வேலை மற்றும் புதிய கட்டிடங்களை அமைப்பதற்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி- திருத்த வேலை மற்றும் புதிய கட்டிடங்களை அமைக்க, 10 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த வேலைகளுக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)



பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலாமன்றத்தின் விசேட கூட்டத்தில் - மன்ற உறுப்பினர் சீதாதேவி சுகிர்தலிங்கம் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட - அமைச்சர் மகேஸ்வரன், மன்றத்தின் தலைவி சூரிய குமாரி குலேந்திரன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

## சின்னஞ்சிறு செய்திகள்

### அகவொளி குடும்பவளத்துணை நிலையத்தில் கருத்தரங்கு

அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில், இன்று பி.ப. 3 மணிக்கு கலாநிதி சௌமியா ரட்ணாயக்கவின் "பேச்சுவள சிகிச்சையும் மனநலமும்" என்ற தலைப்பிலான உரை இடம்பெறவுள்ளது.

பேச்சுவளம் குன்றியோர், நோயினால் பேச்சுவளம் சீரில்லாதோர் மற்றும் இவ்வாறானவர்களைப் பராமரிப்போர், பெற்றோர், ஆசிரியர்கள், மருத்துவப் பணியாளர்கள், உளவளத் துணையாளர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு - அகவொளி இயக்குநர் அருட் திரு. எஸ்.ஜே.இராஜநாயகம் அடிகள் கேட்டுள்ளார்.

### நல்லூரில் சொற்பொழிவு

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் வெள்ளிக்கிழமைதோறும நடைபெறும் சொற்பொழிவுத் தொடரில், இன்று பி.ப. 5.30 மணிக்கு ஆசிரியர் கந்த.சத்தியதாசனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

### துறைமுகத்துள் நுழைந்த இரு தமிழர் கைது!

கொழும்புத்துறைமுக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வள்ளத்தில் நுழைய முயன்ற இரண்டு தமிழர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் கொழும்பு மோதறைப் பகுதியைச சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடமராட்சி கிழக்கில் 31 பேருக்கு காணி அனுமதிப் பத்திரங்கள்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவில், அரச காணிகளில் வசித்துவந்த, 31 பேருக்கு கடந்த வாரம் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையிலான குழு ஒன்று, விசாரணைகளை நடத்திய பின்னர்- இந்த 31 பேருக்கும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன .

ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் அமைக்கப்படும் வீட்டுத்திட்டத்தில், இந்த 31 பேருக்கும் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை 80 பேருக்கு மட்டும் இவ்வாறு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அமைதிக்கும் அபிவிருத்திக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் உள்ளன!

## உலக வங்கித் தலைவர் கூறுகிறார்

அமைதிக்கும் அபிவிருத்திக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதாக, உலக வங்கியின் தலைவர் ஜேம்ஸ் டீ வொல்வ் வென்சன் தெரிவித்துள்ளார்.

ரோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு உலகவங்கித் தலைவர் ஒலி நாடா மூலம், தனது உரையை அனுப்பியிருந்தார். அந்த உரையில் அவர் மேலும், குறிப்பிட்டதாவது-

அமைதி, பொருளாதார அபிவிருத்தி,சமூக நீதி ஆகியவற்றுக்கிடையில் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. இத்தொடர்புகள் காப்பாற்ற வேண்டும். இலங்கைக்கு உலக வங்கி 800 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியுள்ளது. எதிர்காலத்தில் இந்த உதவிகள் இன்னமும் அதிகரிக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.


வாழ்க வளமுடன்




முதலாவது அகவையில்

பெயர் : வி.ஹரிகரன்
முகவரி : இமையாணன், உடுப்பிட்டி.



ஆறாவது அகவையில்

பெயர் : ஜெ.பர்ஷா
முகவரி : முருகமூர்த்தி வீதி, நெல்லியடி.



ஏழாவது அகவையில்



பெயர் : சு.சஞ்ஜிகா
முகவரி : மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------
முகவரி :------------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்பம்


# மட்டுவிலில் மிதிவெடி அபாயமிருந்தும் நெல் விதைப்பு முயற்சியில் விவசாயிகள்

மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்திற்கு வடக்குப்புறமாக உள்ள வயல் வெளிகளில், இவ்வருடம் நெல் விதைப்பதற்குரிய ஏற்பாடுகளில் இப் பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு நடந்த யுத்தத்தின் பின்னர், மீளக்குடியமர்ந்த மக்கள் இங்கு வெடிபொருட்கள் இருக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாக, கடந்த வருடம் இங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடாதிருந்தனர்.

இவ்வயல் வெளியூடாக படையினரின் முட்கம்பி வேலி ஒன்று செல்வதுடன், கடந்த வருடம் இப்பகுதி வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் அமுக்க வெடியில் சிக்கிப் பலியாகியிருந்தார்.

இப்பகுதியிலுள்ள மிதிவெடிகளை அகற்றித் தருமாறு, மிதிவெடியகற்றும் நிறுவனங்கள் பலவற்றிலும் முறையிட்டபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது தமக்குக் கவலையளிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

படையினரின் முட்கம்பி வேலிக்கு உட்பட்ட பகுதிகளில், எவ்வித வெடிபொருட்களும் இருக்காது என்ற நம்பிக்கையில் - நெல் விதைப்பதற்கான ஆரம்ப வேலைகளில் இப் பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது. (24)

# முன்னனுமதி பெற்ற பின்னர்தான் கட்டடங்களை புனரமைக்கலாம்!

## சாவகச்சேரி-நகரசபை பொதுமக்களுக்கு அறிவிப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் - புதிதாகக் கட்டடம் அமைத்தல், விஸ்தரிப்புச் செய்தல், மலசலகூடம் அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரியிறுப்பாளர்கள், நகரசபை, அலுவலகத்தில் உரிய அனுமதியினைப்பெற்ற பின்னரே, கட்டட அமைப்பு வேலைகளை மேற்கொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவன் கேட்டுள்ளார்.


நகரசபை அனுமதி பெறப்படாது அமைக்கப்படும் கட்டடங்கள் மீது, 1982 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியில் 2000 ஆண்டு ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகளினால், சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட கடைகள், வீடுகள் போன்றன பெருமளவில் அழிவடைந்தன. இவற்றினைச் சாதகமாகப் பயன்படுத்தி, ஏற்கனவே அமைக்கப்பட்ட கடைகளுக்கான அனுமதியை வைத்து புதிய கடைகள் அமைக்கப்படுதாகவும், சேதமடைந்த வீடுகளை புனரமைக்கும்போது புதிய வடிவமைப்புக்களில் அமைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (29)

### தில்லையம்பதி அம்பாள் தேர்த்திருவிழா

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய மகோற்சவத்தில் - இன்று காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

# கோலம் - ஒரு கலை மட்டுமல்ல




**கோலக் கலையில் சிறப்புப்பெற்றவரும், கடந்த 20 வருடங்களாக இக் கலையினைக் கற்பிப்பவருமான திருமதி. நாகபூரணி சோமசுந்தரக் குருக்கள் அவர்களுடனான நேர்காணல்.**

**கோலக் கலையினைப் பயிலுவதற்கு ஆர்வம் செலுத்திய மைக்கான காரணம் யாது?**

எங்களுடைய குடும்பத்தைப் பொறுத்தவரையில், எம் வீட்டில் தினமும் காலையில் கோலமிடுவது வழமை. இதனால் எனக்கும் இக்கலையை ஆர்வத்துடன் கற்கமுடிந்தது.

**இக்கலையினைப் பயில்வதற்குக் குருவாக இருந்தவர் பற்றி ..**

எனது தகப்பனார் 12 வருடங்களாக இந்தியாவில் வசித்து வந்தமையால், இந்தியாவைப் பொறுத்தவரையில், எல்லோருமே கோலம் இடுவது வழமை. இதனால், எனது தகப்பனாரும் எனக்குச் சிறுவயதில் இருந்தே பயிற்றுவித்தார். என்னைப் பொறுத்தவரையில் எனது தகப்பனாரே எனக்கு குருவாக விளங்கினார்.

**மகளிருக்கு இப்பயிற்சியினை எப்போது தொடக்கம் வழங்கி வருகின்றீர்கள்?**

1983 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை வழங்கிக் கொண்டிருக்கின்றேன் எனலாம். முதலில் 82 ஆம் ஆண்டு வீரசிங்கம் மண்டபத்தில் மகளிர் குழுத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் 45 மகளிருக்கு 3 மாத காலப்பயிற்சி வகுப்பினையும், அதனைத் தொடர்ந்து கோப்பாய், நீர்வேலி போன்ற பிரதேசங்களிலுள்ள மகளிரும் சிறுசிறு குழுக்களாகச் சேர்ந்து, அவர்களுக்கும் இப்பயிற்சியினை வழங்கினேன். 1990 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் TIP TOP, கலாலயா போன்ற பயிற்சி நிலையங்களிலும் பயிற்றுவித்தேன்.

**பாடசாலை மட்டத்தில் பயிற்சி வகுப்புக்கள் பற்றி...**

முதன்முதலில் 1985 ஆம் ஆண்டு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலுள்ள விடுதியில் தங்கியிருக்கும் மாணவிகளுக்கு மாலைநேர வகுப்புக்களை வழங்கியதுடன், வேம்படி மகளிர் கல்லூரியிலும் சனி, ஞாயிறு தினங்களில் பயிற்சிகளை வழங்கினேன்.

**இதனைத் தினமும் செய்வதனால் எவ்வாறான பலன்களைப் பெறமுடியும் எனக் கூறமுடியுமா?**

எமது உடலுககுச் சிறந்த தேகப் பயிற்சியாக அமைகிறது. பெண்களைப் பொறுத்தவரையில் கருப்பை சம்பந்தமான பிரச்சினைகளைத் தவிர்க்க முடிகிறது. இடைகள் சிறுத்துக் காணப்படும். மனதை ஒருநிலைப்படுத்தும் தன்மை ஏற்படும். சிறுவர்கள் இதனைப் பழகுவதால் - மனக்கணிதம், மனனம் செய்யும் திறன், கற்பனா சக்தி, கலை உணர்வு உண்டாகும். இதனைவிட வீட்டில் நடைபெறும் நிகழ்வுகளைக் கோலத்தின் வடிவத்தைப் பொறுத்து அறியக்கூடியதாக இருக்கின்றது. தீய எண்ணத்துடன் வீட்டுக்கு வருபவர்களின் எண்ணத்தை மாற்றும் சக்தி இதற்கு உண்டு. மங்களகரமாக இருக்கும். தினமும் கோலம் இடும் வீட்டில் - கோலம் இடப்படாவிட்டால் வீட்டின்நிலை, வீட்டில் உள்ளவரை அணுகாமலே அறிந்து கொள்ள முடிகிறது.

**கோலத்தின் வகைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

புள்ளிக்கோலம், கோட்டுக்கோலம் என்பன மாவினால் தூவியும், கரைத்தும் போடப்படுகின்றன. வர்ணம் கலந்த கோலங்கள் - தேங்காய்ப்பூ, வெள்ளையரிசி, மரத்தூள், முருகல் மா, அரிசி மா போன்றவற்றிலும், தானியக் கோலம்- இயற்கை வர்ணம் கொண்ட தானியங்களாலும், மலர்க் கோலம் - அழகிய மலர்களாலும் போடப்படுகின்றன.

**நீண்ட நேரம் கோலம் கலையாதிருப்பதற்கு யாதுசெய்ய முடியும்?**

கோலத்தினைக் கீறிய பின்பு, பசையினைப் பூசிப் பின்னர் வர்ணக்கோலமோ அல்லது தானியக் கோலங்களையோ போடுவதால் கலையாமல் இருக்கும்.

**எந்த வயதினர் இதனைப் பயிலுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்?**

முன்னைய காலப்பகுதியில் வயதிற்கு வந்த வர்கள் மட்டும் இதனைப் பயில முன்வந்தார்கள். தற்போது சிறு வயதில் இருந்தே இதனைப் பயில ஆர்வம் காட்டுகின்றனர் எனலாம்.



நாகபூரணி சோமசுந்தரக்குருக்கள்

**விசேடமான நிகழ்ச்சியில் எவ்வாறான வர்ணங்கள் மூலம் கோலம் போடப்பட வேண்டும்?**

பலவர்ணங்கள் கலந்து போடப்படுகின்றது.

இதனை ரங்கோலியாகப் போடுவது எனவும் அழைப்பர். ரங் என்றால் வர்ணம். கோலி என்றால் கோலம் எனப் பொருள்படுகின்றது.

மேலும் - திவசம், மாலையம், சுமங்கலிப் பிரார்த்தனை போன்றவற்றிற்கு மஞ்சள், அரிசிமா இரண்டும் கலந்து போடப்படுகின்றது. மஞ்சள் புனிதமானதும் மங்களகரமானதும், வெள்ளை தூய்மையானதும் ஆகும்.

**இக்கலையினைப் பற்றி புத்தகங்கள் வெளியிட்டீர்களா?**

மூன்று புத்தகங்கள் வெளிவந்துள்ளன. முதலாவது பாகம் 87 ஆம் ஆண்டு சுவர்ணம் பப்பிளிஸிற்றிஸ் அனுசரணையுடன் 'அழகுக்கோலம்' என்னும் பெயரில் வெளிவந்தது. 88 ஆம் ஆண்டு முரசொலி பத்திரிகையின் அனுசரணையுடன் 'மாதம் ஒரு கோலம்' என்ற பெயரில் வெளிவந்தது. மூன்றாவது பாகம் - சிறிலங்கா புத்தக சாலை நிர்வாக இயக்குநர் திரு, திருமதி இராஜேஸ்வரன் அவர்களின் அனுசரணையுடன் 'அழகுக் கோலம்' என்ற பெயரில் வெளிவந்தது.

**உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி ?**

1993 ஆம் ஆண்டு நல்லூர் சிக்கன கடனுதவிச் சங்கமும், உலர்வலய அபிவிருத்திச்சங்கமும் சேர்ந்து தமது பத்து வருடப் பூர்த்தியில் அன்று எனக்குப் பாராட்டு விழா வைத்தனர். இதன்போது 'கலைமணி' என்ற பட்டத்தைத் தந்து கௌரவித்தனர்.

**இக்கலைபற்றி இன்றைய பெண்களுக்கு யாது கூறவிரும்புகிறீர்கள்?**

வேலைக்குப் போகும் பெண்களாக இருந்தாலும்கூட தினமும் கோலம் இடுவது சிறந்தது.

இதனால், மனதில் கவலையற்ற தெளிவுவரும். அவர்களே தங்களை ஓர்நிலைப்படுத்திக் கொள்ளமுடியும். சிறுவர்களுக்குக் கலையுணர்வைத் தூண்டி, முரட்டுச் சுபாவத்தை நீக்கும். இதனால், எல்லாப் பெண்களும் காலையில் இதனைப் இடுவது சிறந்ததாகும். அத்துடன், பண்பாட்டுக் கலையை வளர்க்கவேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

## சிறந்ததோர் உடற்பயிற்சியும்கூட!



சந்திப்பு
உஷா, கலானந்தி

# கவிதைச் சோலை

## நட்பு



உறவுகள் கூட
வாழ்க்கை வசதிகள்
பெருகினால்...
சிலவேளைகளில் - வழிமாறிப்
போய்விடும்.
காதலால் விளையும் - அன்பு
பருவங்கொண்ட பயிரைப்போல
அறுவடையாகிவிடும்.
இரண்டு இதயங்களுக்கு
இடையில் மலரும் - நட்பானது...
வானவில்லைப்போல
என்றென்றும்... எப்பவும்...
எப்போதும்... நிலைத்து நிற்பதும்,
மனித வாழ்வில் - திரும்பி
வராததும் - புனிதமானதும்
'நட்பு' என்ற
பந்தம் ஒன்றுதான்...!
நட்போடு சேர்ந்த
வாழ்வே உண்மையானதும்
நேர்மையானதும் கூட.

சுகந்தினி
இணுவில்.

## இறப்புக்களோரு என் இறப்பு



என் இரண்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டு
என் இறப்பை மனக்கண்ணால் பார்த்தேன்.
அடர்ந்த காடுபோல் இருண்ட வானம்
பறந்த வான்வெளியில்
படர்ந்திருந்த கருமுகில் கொடிகளை
சூரியக் கரங்கள் வெப்ப நகங்களால்
கீறிக் கிழிக்கின்றன.
படர்ந்திருந்த கருமுகில்க் கொடிகள்
இடத்திற்கிடம் குவிக்கப்படுகின்றன.
களைத்த கதிரவன் மலையடிவாரத்தில்
மயங்கிச் சாய்கின்றான்.
பிறந்தன குயிலிசைகள்
அசைந்தன மயில்கள்
கதிரவனால் கருக்கப்பட்டு மடிந்த
பசிய மரக்கன்றுகளுக்காய்
அறுக்கப்பட்ட கருமுகில்க் கொடிகள்
கண்ணீர் மல்கி மனமுடைந்தழுதன.
அன்று என் இறப்பு
எவ்வளவு மகத்தானது.

வில்லூர்,
இரா.காயத்திரி.

# கடதாசிப் பூ

## (BOUGAIN VILLEA)

**தேவையான பொருட்கள்**

**பப்பிளின் துணி - 1/2m ஒரேஞ், பச்சை**
**கட்டுக்கம்பி**
**Flower tape**
மகரந்தம்



**செய்முறை -**

முதலில் துணிக்குக் கஞ்சியிடப்பட வேண்டும். பின் பூவிற்குத் தேவையான இதழ்கள் மூன்று வெட்டி எடுத்து, ஒவ்வொன்றையும் சமச்சீராக மடித்து, அதனை லேஞ்சியில் வைத்து றூள் செய்யவும். பின் ஒவ்வொரு இதழிலும் மகரந்தம் ஒன்றை எடுத்து ஒட்டவும். பின் கட்டுக்கம்பிக்கு **Flower tape** சுற்றிய பின், அந்த மூன்று இதழ்களையும் சேர்த்துக் கம்பியின் மேல் ஒட்டவும். அதேபோல் இலையின் உருவைத் துணியில் வெட்டி, கம்பியில் ஒட்டியபின், கம்பியுடன் சேர்த்து றூள் பண்ணவும். இப்படியாகச் சிறிய இதழ்களைக்கொண்ட பூக்களையும் செய்து அதனை நுனியில் வைத்து ஓர் ஒழுங்குமுறையில் ஒழுங்கு படுத்தியபின், அவற்றுடன் இலையையும் இணைத்து அழகானதொரு பூக்கொத்தைப் பெறமுடியும். மொட்டுச் செய்வதாயின் சிறிய இதழ் உருவை வைத்து வெட்டி மேற்கூறப்பட்டவாறு ஒட்டிச் செய்யலாம்.

# ஒரு பூவின் பயணம்

**பெண்ணியல்வாதிகளின் வேலைத்திட்டம் என்பது ஆண்களின் மேலாதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாகும். அதைச் சாதிக்க ஆணாதிக்க சமூகம் எங்களுக்கு வழங்கியுள்ள பண்பாட்டுக் கலையை, மதத்தை, சட்டங்களை, அதன் தந்தை வழிபட்ட தனிக்குடும்ப அமைப்பை, மற்றுமுள்ள அதன் அனைத்துப் படிமங்களை, நிறுவனங்களை, பழக்கவழக்கங்களை நாங்கள் ஒன்றுவிடாமல் அழித்தே ஆகவேண்டும். ஏனென்றால், இவைகள் எல்லாம் சேர்ந்துதான் எங்களை 'ஒன்றுக்கும் ஆகாதவர்கள்' என ஒதுக்கின. கண்ணுக்குப் புலனாகாத விதத்தில் எங்களைப் பலிக்கடாவாக்கின.**

**- ஆந்திரே வொர்க்**

**அத்தியாயம் 10**



ச.சாரங்கா

பெண் விடுதலைக்காகப் பிரேரிக்கப்பட்ட மேலுள்ள உக்கிரமான வரிகளைத் தீவிரவாதப் பெண்ணியவாதிகள் உரிமை கொள்கின்றனர். 60 ஆம், 70 ஆம் ஆண்டுகளில் செயற்படத் தொடங்கிய இவ்வமைப்பு - மிதவாதப் பெண்ணியத்தின் எதிரிடை எனலாம். பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இதன் மிகவேகமான வளர்ச்சி அவதானிக்கப்பட்டது.

ஆணைச் சார்ந்தே பெண் வாழ்ந்தாக வேண்டும் என்ற கருத்து எமது சமூகத்தில் ஊறிய பிரிக்கமுடியாத இயல்பாகக் காணப்படுகிறது. சமய, சமூக, கலாசாரக் காரணிகள் இதனை மறைமுகமாகவும், நேரடியாகவும் வற்புறுத்தி வருகின்றன. பால்ரீதியான அடக்குமுறைகளும், குடும்ப அமைப்பில் சமமற்ற பங்குநிலையும் எமது நீண்டகால வரலாறு "**கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன**", "**ஊமையான மனைவி**

## நிலவோ?...இது நீறாக்கும் கதிரோ?...

**அடிபடுவதே இல்லை**", "**பொம்பிள்ளை சிரிச்சாப் போச்சு; புகையிலை விரிச்சாப் போச்சு**", "**பின் தூங்கி முன்னெழும் பேதை**" போன்ற மொழித் தொடர்கள் இதனை மெய்ப்பித்து நிற்கின்றன. உண்மையில் ஆணானவன் தன் ஆதிக்க வேட்கையில் சமுதாய உற்பத்திக்கும், ஆக்கத்திற்கும் உரிய ஆதாரசக்தியாக விளங்கும் தாயை அடிமைப்படுத்திவிட்ட வரலாறே மனித சமுதாயத்தின் சாரம் என்பார் ஏங்கல்ஸ். இது பெண்களுக்கேற்பட்ட உலகளாவிய வரலாற்றுத் தோல்வி என்பது அவரது கருத்து.

இவ்வாறான போக்குகளை மாற்றுவதற்கு ஆண்களும், பெண்களும் எடுக்கின்ற உணர்வுபூர்வமான நடவடிக்கையே பெண்ணியம் எனலாம். பெண்ணியவாதிகள் எல்லோரும் பெண்கள் அல்லர். ஆனால், அவர்களுள் பெண்களும் அடங்குகின்றனர். ஆரம்ப காலங்களில் மிக மோசமாக இருந்த ஆணாதிக்க செயற்பாடுகள் அல்லது ஆண்களின் மேலாண்மை - பெண்ணியத்திற்கு வித்திட்டது. பிருகதாரணிய உபநிடதத்தின்படி "**தன்னை விரும்பாத ஒரு பெண்ணை வலிந்து பற்ற அனைத்து உரிமைகளும் உடையவன். ஆண்**" எனச் சுட்டப்படுகிறது. இந்நிலை அக்கால ஒடுக்குமுறைகளுக்கு ஒரு சிறு சான்றாகும்.

*இந்த இலையுதிர்காலத்தின் இறுதி*
*எமது உரிமை*
*எங்கள் உடல்கள் நிலக்கரி*
*போல்-*
*கிடத்தப்படுகின்றன.*
*மற்றுமொரு இலையுதிர் காலத்தில்*
*இக்காலம் தனது*
*இலைகளைத் தங்கமென உதிர்க்கின்றது.*
*நாங்கள் விரும்புவது அத்திமர இலைகள்*
*பட்டுப்போன செடிகளாயிருந்து*
*பருவகாலங்களைத் தரிசிக்க விரும்பு-*
*கிறோம்.*

மொஹமத் தார்வீஷின் கவிதையில் விரவிய வெறுமையின் ஆழ்ந்த துயரமே பெண்களுக்கு எஞ்சியிருந்தது. இதனால், அமைதியுள் மூழ்கிக் கிடந்த பெண்குலம் விழித்தெழத் தலைப்பட்டது.

*கூட்டுக் கிளிக்குப் பிறந்த*
*குஞ்சுக் கிளிக்கு*
*எப்படி ஏன் வளர்ந்தன*
*சிறகுகள்?*

அப்துல் ரகுமானுக்குள் மட்டுமல்ல, எங்கள் எவருள்ளும் இருக்கத்தக்க இக்கேள்வியின் பதில் அதாவது, பெண்ணிய விடுதலைச் சிந்தனைகளின் முளைத்தல் நிகழ்ந்த காரணம் கண்டோம். இனி அதன் முனைப்பினை நோக்கி நகரலாமா?

தொடக்ககாலப் பெண்ணியம் போராட்டம், மிதவாதப் பெண்ணியம் ஆகும். இது உடலாலும், மனத்தாலும் பெண்களும், ஆண்களும் வேறுபட்டவர்கள் என்று காட்டி, பெண்களும் மனிதர்கள், அவர்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்ற கோரிக்கையோடு ஆரம்பமானது. மானுட வளர்ச்சிக்குரிய பூரண சமத்துவம், சட்டரீதியில் கொண்டுவரப்பட வேண்டும். பெண் கல்வி முன்னொடுக்கப்படவேண்டும் என்ற கோட்பாடுகள் இதனால் முன்னொடுக்கப்பட்டன.

சிக்கல்களை மிகமெதுவாகத் தீர்க்க முனைந்த அகிம்சை வழியிலான இச்சீர்திருத்தக் கொள்கையின மந்தமான போக்கைக் கண்டித்துப் புதிய போக்கு உருவானது. மார்க்சிய பெண்ணியம் ஆனது முதலாளித்துவ மேலாதிக்கத்தை முறியடித்ததனால், பாட்டாளி வர்க்கத்தை மேம்படுத்திக் குடும்பத்தில் பெண்ணின் அடிமை விலங்கை உடைக்க முடியும் என்ற நம்பிக்கையோடு ஆரம்பமானது. பெண் மென்மையானவள் எனக் காரணங்காட்டிச் சம கூலி அவளுக்கு மறுக்கப்பட்டது. பெண்ணின் தொழிற்களம் அவளை மேம்படுத்துவதாக இருக்கவில்லை. ஆனால, சமூகத்தில் பெரிய சுமையான பொறுப்புக்களைப் பெண்களே ஏற்று நடைமுறைப்படுத்துகின்றர் என சமூகவியல் ஆராயச்சியாளரான **Murdock** கூறுவார். நியமவாதக் கருத்தான மார்க்சியப் பெண்ணியம்- தந்தைவழி சமூதாயத்தை ஒழிக்கவேண்டும் என்பதைவிட, பெரிதாக எக்கோட்பாட்டையும் கொண்டிருக்கவில்லை என்பதனால் சோஷலிசப் பெண்ணியம் என்ற புதிய போக்கு உண்டானது.

கிளாரா ஜெட்கின், அலக்சாந்தரா, ஏஞ்சல் போபொப், போன்ற பெண்ணியவாதிகள் முன்னெடுதத சமத்துவப் பெண்ணியம் தமது போராட்டத்தால் 1976 இல் சமகூலி சட்டத்தின் நடைமுறையைச் சாத்தியமாக்கியது. இச்சோஷலிசப் பெண் நிலைவாதம் வியட்னாமில் தேசிய விடுதலைப் போராட்டம், தென்னாபிரிக்க நிறவெறி எதிர்ப்புப் போராட்டம் மேலும் பல புரட்சிகரப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கிற்று. ஐரோப்பிய அமைதி இயக்கம், அமெரிக்க முற்போக்கு ஜனநாயக இயக்கங்களின் செயற்பாடுகளிலும் இப்பெண்ணியவாதிகளின் பங்கு இருந்தது. இப்பெண்ணியம் குறித்த கண்டனங்கள் எழும்பாதது இதன் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. மிதவாதமும், சோஷலிசப் பெண்ணியமும் இணைந்து தூய/மரபுநிலைப் பெண்ணியவாதமாக உருப்பெற்றது. இவர்கள் பெண்கள் உடலியல் காரணிகளே, குறிப்பாகக் கருத்தரித்தல் இயல்பே பெண்ணடிமைத்தனத்திற்கு வழிகோலுவதாக வாதிட்டனர். அத்துடன், ஆணாதிக்கத்தை எவ்வகையிலும் ஏற்கமறுத்தனர்.

*சீதனத்தையும்*
*சீதனமாய்*
*சிறப்பான பெண்களையும்*
*மனைவியராய்ப் பெற்றுக்கொண்ட*
*துணைவர்களால்*
*அடிமை விலங்கால்*
*அழுத்தமாய்க் கட்டப்பட் டுள்ளோம்.*
*...................................*
*குழந்தைகளைப் பெற்று வளர்க்கும்*
*இயந்திரங்களாய் நாம்*
*இருக்க வேண்டும்.*

என்ற அஷ்ரபா நூர்டினின் கவிதை வரிகள் இதனைத் தெளிவுற எடுத்துக் காட்டுகின்றன. தீவிரப் பெண்ணியம் சமூகப்பபடி நிலைகள் சகலதையும் உதறித்தள்ளும் நோக்கில் ஆக்ரோஷமாக எழுந்தது. அதனையே இக்கட்டுரையின் ஆரம்பத்தில் கண்டோம். இவர்கள் பெண்களின் துன்பங்களுக்கு எல்லாம் மூலகாரணமானவர்கள் ஆண்களே எனும் கொள்கையைக் கொண்டிருந்தனர். பெண்மை மீதான பலாத்காரம், பெணகள் மீதான மேய்ச்சல் பார்வை, பெண்ணைக் கவர்ச்சிப் பொருளாக விளம்பரங்களில் பயன்படுத்தல் எனச் சகல பால் ஒடுக்குமுறைகளையும் இவர்கள் சாடினர்.

*கற்பு பற்றியும்*
*மழை பெய்யெனப்*
*பெய்வது பற்றியும்*
*கதைக்கும் அவர்கள்*
*எப்போதும்*
*எனது உடலையே*
*நோக்குவர்*
*கணவன் தொடக்கம்*
*கடைக்காரன் வரைக்கும்*
*இதுவே வழக்கம்.*

என்ற சங்கரியின் கவிதையைக் காணுங்கள். இத்தீவிரவாதப் பெண்ணியமானது உண்மையில் ஒரு உலக அச்சுறுத்தலாய் வளர்ந்து வருகிறது. பெரும்பாலும் மேல் நாட்டில் இதன் வளர்ச்சி அசுரத்தனமானதாக இருக்கிறது.

ஆணாதிக்கத்தைப் பெண்கள் தகர்த்தெறிந்தே தீருவார்கள் என்பதே தீவிரப்பெண்ணியக் கோட்பாடாக உள்ளது. தஸ்லீமா நஸ்ரீன், மீரா நாயர், தீபா மேத்தா போன்ற உலகத்தையே அதிர வைக்கும் பெண்கள் இவ்வரிசைக்குறியவர்கள். தஸ்லீமா நஸ்ரீன் எழுதிய "**லஜ்ஜா**" என்னும் நாவல், அவரைத் தன் தேசமான பங்களாதேஷிலிருந்து நாடு கடத்தப்பட வழிகோலிற்று. மீரா நாயரின் திரைப்படங்கள் அனைத்துமே பெரும் விமர்சனத்துக்குறியவை. உதாரணமான "**காமசூத்ரா**"வைக் காட்டலாம். தீபா மேத்தாவின் "**பயர**" படம லெஸ்பியன் உறவுமுறையை ஆதரித்து, ஆண்கள் இன்றிய உலகில் பெண் வாழுதல் பற்றிய புதிய நோக்கினை முன்வைத்தது. தந்தைவழி ஆதிக்கத்தைத் தகர்த்துத் தனித்த பெண்களின் உலகைப்படைப்பதே இவர்களின் அழகிய கனவாக விளங்கிவருகிறது.

1945 இல் **Shulamith Firestone** எழுதிய "**The Dialectic of sex**" எனும் நூல் இவர்களின் வழிகாட்டியாகும். இயற்கைக்கு முரண்பட்ட குடும்பக் கட்டமைப்பைச் சிதைக்க முற்படும் இப்பெண்ணியம்- மனித குலத்தை ஆதிவாசிகளின் நிலைக்கு எடுத்துச்செல்வதோடு, கட்டுப்பாடற்ற வாழ்க்கை நெறியை உருவாக்குகின்றது. விவாகரத்துக்களைப் பொதுவான சாதரண நிகழ்வாக்கி, நடைமுறைக்கு ஒவ்வாத கற்பிதக் கோட்பாடக இயங்குகின்றது என்ற கண்டனங்களுக்கும் இது இலக்காகின்றது.

பெண்ணியச் சிந்தனைகள் பற்றிய தெளிவான விளக்கத்தின் பின்னணி எந்த ஒரு சமூகத்திலும் காணப்படுகின்ற பெண் மீதான நெருக்கடியை விளங்கிக்கொள்ள வழிசெய்கிறது. எனவே, இப்பயண வழியிலும் இவற்றை சந்தித்தபடி தொடர்ந்து பயணிப்போமா?

*பயணம் தொடர்கின்றது.....*

# பழங்களும் அதன் பயன்களும்



**அன்னாசிப் பழம்**

உணவைப் சீரணம் செய்வதற்கும், இருமல், வாய் நாற்றம், வாதம் சம்பந்தமான நோய்களை நீக்கும். உடம்பு, எலும்பு, பல் என்பவற்றைப் பலப்படுத்தும். மழை காலங்களில் சாப்பிடுவது நல்லதல்ல.

**தக்காளிப் பழம்**

உடல் வறட்சி, வயிற்றுப்புண், மலச்சிக்கல், சிறுநீரகக் கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும்.

**அப்பிள் பழம்**

தாகத்தை தீர்ப்பதற்கும், உடல் வறட்சி, வயிற்று அழற்சி போன்றவற்றை நீக்கும். குடல் புண், வயிற்றுப் புண், வாய்ப்புண் போன்றவற்றைக் குணமாக்கும்.



**தோடம்பழம்**

சூடு, குடல் வறட்சி, தாகம், மலக்கட்டு, கணச்சூடு, தலைச்சுற்று, சொறி, சிரங்கு, பல்க் கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும். மேனியை அழகாக்கும். உடல் வளர்ச்சியுடன் கூடிய சக்தியைக் கொடுக்கும்.

**திராட்சைப் பழம்**

பித்தக் கோளாறு, மலச்சிக்கல், வாதம், உடற் சூடு வயிற்றுப்புண், நாவறட்சி, சிறுநீர்பிரச்சினை, உடம்புவலி, தலைச்சுற்று, களைப்பு, வாய்நாற்றம், தொண்டைப்புண் போன்றவற்றைக் குணமாக்கும். கை, கால், மூளை போன்றவை பலமடையும். முகம் அழகு பெறும்.

**எலுமிச்சம் பழம்**

இளமையுடன் இருக்க வேண்டுமாயின் அதிகம் எலுமிச்சம் பழம் சாப்பிடவேண்டும். தோலைக் காயவைத்து, அரைத்துத் தூள் செய்து தலைவலி வரும்போது தடவினால் தலைவலி நிற்கும். இதன் சாற்றில் தேன் கலந்து தினமும் சாப்பிட்டால் வாய்ப்புண் ஏற்படாது, பித்தக்கோளாறு மறையும். வாந்தியை நிறுத்துவதுடன், களைப்பைப் போக்கும். வாயுக் கோளாறு, வயிற்றுவலி, இருமல், மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு இவைகளை குணப்படுத்தும். இவற்றைவிட வாந்தி, மயக்கம், பித்தம், வயிற்றுப் புண், இருமல், சிறுநீரக நோய், வாய்நாற்றம், பல் ஆட்டம், தூக்கமின்மை, கண்நோய் போன்றவற்றை நீக்கும் சக்தி இதற்குண்டு. காயே சிறந்தது.

**பேரீச்சம் பழம்**



களைப்பு, தொண்டைக்கட்டு, பக்கவாதம் போன்ற வற்றைத் தணிக்கும், மூளை, எலும்பு, தசை போன்ற வற்றை வலுப்படுத்தும் இளைப்பு, மூட்டுவலி, உடம்பு அசதி ஏற்படாமல் தடுக்கும். ஆஸ்மா நோயாளிக்கு நல்லது. மூல நோயாளிக்கு ஆகாது.

**பப்பாளிப் பழம்**

கண்நோய், வாய்நாற்றம், தொண்டைப்புண், வயிற்றுப்புண், பல் சம்பந்தமான நோய்கள் என்பவற்றைக் குணமாக்கும். யானைக்கால் வீக்கம் குறையும். நோய் எதிர்ப்புச் சக்தியை உண்டுபண்ணும். கரு அழியும். இதன் இழையை அரைத்து யானைக்கால் வீக்கத்துக்கு வைத்துக் கட்ட வீக்கம் குறையும்.

**பலாப்பழம்**

மூளைவலுவடைவதுடன் அறிவை விருத்தி செய்யும். இதை பசுநெய், தேன் என்பவற்றுடன் சேர்த்து உண்டால் - களைப்பு, இருமல் என்பவற்றை நீக்கும். அதிகம் உண்பது நல்லதல்ல. இதை உண்டபின் இதன் கொட்டையைச் சுட்டெடுத்து சாப்பிடுதல் நன்று.

**கொய்யாப் பழம் -**

வயிற்றுப்புண், மலக்கட்டு, வயிற்றுக் கோளாறு, இருதய படபடப்பு, தோற்கோளாறு என்பவற்றை நீக்கும். மூளை எலும்பு, உடல் என்பன பலமடையும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

*சிந்தனைக்கு*

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

- *திருக்குறள்.*

## நமது நோக்கு

### தகர்ந்தது பொறியும் கபடமும் !

ரோக்கியோ மாநாட்டில் வைத்து - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்த தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு, அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்து - விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்ட, வட-கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கான உயர்மட்ட ஆலோசனைச் சபையின் புதிய பெயரே என்பதைக் குறிப்பிட்டு, இந்த யோசனையை விடுதலைப் புலிகள் நிராகரித்திருக்கின்றனர்.

அதேவேளை - ரோக்கியோ மாநாட்டின் மூலமாக விடுதலைப் புலிகளுக்கு அழுத்தத்தைக் கொடுத்து, அவர்கள் மீது, தமது முடிவுகளைத் திணிப்பதாக நடந்துகொண்ட சர்வதேச சக்திகள் சிலவற்றுக்கு, விடுதலைப் புலிகள் தகுந்த பதிலளித்திருக்கின்றனர்.

இவ்வாறான சக்திகளின் துணையுடன் - புலிகள் மீது நிர்ப்பந்தத்தைப் பிரயோகிப்பதற்குத் திட்டமிட்ட ரணில் அரசாங்கத்தின் கபடத்தனமான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது உறுதியான நிலைப்பாடு மூலம், எதிர்ப்பை வெளிக்காட்டியிருக்கின்றனர்.

ரோக்கியோ மாநாட்டின் இறுதிப் பிரகடனத்தில் - விடுதலைப் புலிகளின் அமைதி முயற்சிகளுக்கான பொறுப்புணர்வைப் பாராட்டிவிட்டு, மறுபுறமாக -

விடுதலைப் புலிகளின் கலந்தாலோசனையில்லாமலும், அவர்களது கருத்துக்களைப் பெறாமலும், தன்னிச்சையான முடிவுகளை ரோக்கியோப் பிரகடனம் வெளியிட்டது.

அமைதி முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென, ரோக்கியோப் பிரகடனம் கூறுவது சாதகமான அம்சமாக இருந்தபோதும் -

தனது முடிவுகளையும், தீர்மானங்களையும் விடுதலைப் புலிகள் மீது திணிப்பதற்கு அது முயற்சிப்பது நேர்மையானதல்ல என்பதுடன் - தந்திரம் நிறைந்த, அழுத்தம் கொடுக்கும் சர்வதேச ஆதிக்க சக்திகளின் சூழ்ச்சியாகவுமே காணப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் குறிப்பிடுவதுபோல -

'அமைதி முயற்சிகளை, மூன்றாம் தரப்பு அனுசரனை நிலையிலிருந்து - இந்தத் தீவின் அரசியல் பொருளாதாரத் தலைவிதியை பெருதொலைவிலுள்ளதாக்கும் - பயங்கரமான வெளிச் சக்திகளின் ஆதிக்கம்மிக்க சர்வதேச மத்தியஸ்த நிலைக்கே கொழும்பு அரசாங்கம் மாற்றியிருக்கிறது' என்பது இங்கு ஆழ்ந்து கவனிக்க வேண்டியதாகிறது.

கடந்த பல ஆண்டுகளாக - ஆயிரக்கணக்கான போராளிகளை, பொதுமக்களை இழந்து, சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் போராடி - பெரும் தியாகத்தின் ஊடே எழுந்து நிற்கின்ற தேசிய விடுதலை இயக்கத்தை -

இந்த மண்ணுடன் எவ்விதத்திலும் தொடர்பில்லாத, மாறாக- தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கு, சிங்கள அரசாங்கங்களுக்குத் துணையும், உதவியும் வழங்கிய - இராணுவ நலனுக்குத் தீனிபோட்ட/இன்றும் போடுகின்ற - அந்நிய சக்திகளின் தலையீடுகளின் வழியே, நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கும் ரணில் அரசாங்கத்தின் போக்கை, விடுதலைப் புலிகள் பகிரங்கமாகச் சாடியிருப்பது -

தன்மானமும், சுயகௌரவமும் மிக்கதே தமிழினம் என்பதையும், எத்தகைய ஆதிக்க சக்திகளினதும் அடிவருடிகளினதும் சூழ்ச்சிக்கு விடுதலைப் புலிகள் பலியாகமாட்டார்கள் என்பதையும் - உலகிற்குத் தெளிவாக உணர்த்தியிருக்கிறது.

பொருளற்ற, உருப்படியற்ற ஆலோசனைகளுக்கு விடுதலைப் புலிகளை இணங்கச்செய்வதற்கு - ரோக்கியோ மாநாட்டை ஒரு தந்திரோபாய உத்தியாகப் பயன்படுத்தியிருக்கிறது ரணில் அரசாங்கம் என்ற உண்மையை - விடுதலைப் புலிகளின் நிராகரிப்புக்கான தெளிவான அடிப்படை வெளிப்படுத்தியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றாத போதே - இவ்வாறான ஒரு பொறிக்குள் அவர்களைச் சிக்கவைக்கவும், ஆதிக்கம் செலுத்தி அடிபணிய வைக்கவும் முயற்சிகள் நடந்திருக்கின்றபோது -

தாம் பங்குபற்றாது, விடுதலைப் புலிகள் ரோக்கியோ மாநாட்டைத் தவிர்த்துக் கொண்டமையானது, மிகுந்த தெளிவான பார்வையையும், நுட்பமான இராஜதந்திர திறனாற்றலும் கொண்ட நடவடிக்கையே என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழினத்தின் விடுதலை வரலாற்றில் - பலமுறை நடந்த அரசியல் சதிகளுக்குள்ளும் சிக்கிவிடாது - உறுதியுடன், தமிழினத்தை வழிநடத்திய விடுதலைப் புலிகளின் தலைமை - இம்முறையும் மிகச் சிக்கலான அரசியல் நெருக்கடிகளுக்குள்ளாகவும் தனது நகர்வை வெற்றிகரமாகச் சாதித்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் சொல்லியிருப்பதுபோல, 'இந்த மண்ணுக்குச் சம்பந்தமில்லாத, வெளிச்சக்திகளின் மிதமிஞ்சிய வேண்டத்தகாத தலையீடுகளை அனுமதித்து' - புலிகள் ஏற்கனவே நிராகரித்துவிட்ட யோசனையை, புதிய பெயர்கொண்டு மெருகேற்றி - தமிழினத்தின் தலையில் கட்டிவிடுவதற்குத் திட்டமிட்ட அரசாங்கத்தின் முயற்சி, விடுதலைப் புலிகள் ஜப்பான் மாநாட்டில் கலந்துகொள்ளாததன் மூலம் முறியடிக்கப்பட்டிருக்கிறது. தமிழினம் மீண்டுமொருமுறை காப்பாற்றப்பட்டிருக்கிறது.

பிரதமர் ரணிலின் பழைய பல்லவியான, ரோக்கியோ யோசனையை நிராகரித்திருப்பதன் மூலமும், ரோக்கியோ பிரகடனங்கள் எவ்வகையிலும் தம்மைக் கட்டுப்படுத்தாது என்பதை யதார்த்தபூர்வமாக எடுத்துச்சொல்லியிருப்பதன் மூலமும், வெளிச்சக்திகளின் தாளத்திற்கு ரணில் அரசாங்கம் ஆடுவதையும் - அதனூடாக அமைதி முயற்சிகள் குழப்பத்திற்காளாகுவதைக் கடுமையாகச் சாடியிருப்பதன் மூலமும் -

விடுதலைப் புலிகள் - எவராலும் ஏமாற்றப்படவோ, பொறிக்குள் சிக்கவைக்கப்படவோ, எத்தகைய பெரும் சக்திகளினதும் ஆதிக்கத்திற்குள் அமிழ்த்தப்படுவதற்கோ முடியாதவர்கள் என்பது அறுதியும் உறுதியுமாகச் சொல்லப்பட்டுவிட்டது.

விடுதலைப் புலிகளின் இந்த அரசியற்தெளிவும், எதிர்காலத்தைக் கணித்து நகரும் இராஜதந்திரமும், நியாயமான துணிச்சலும், அடிபணியாத வீரமும் - தமிழினத்தை எக்காலமும் காத்துநிற்கும் என்பது மறுபடியும் ஒருமுறை இதனால் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

# ஒவ்வொரு இலங்கைப் பிரஜைக்கும் 95 ஆயிரம் ரூபா வெளிநாட்டுக் கடன்

### சரத் அமுனுகம கூறுகின்றார்

ரோக்கியோவில் இலங்கை அரசுக்கு கிடைத்த நிதி உதவிகளில் 90 வீதமானவை கடன்களே. ரோக்கியோ மாநாட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற கடன்களினால் இலங்கைப்பிரஜை ஒருவருக்கும் 22 ஆயிரம் ரூபாவால் கடன் அதிகரித்துள்ளது.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் வெளிநாடுகளில் கடன்களைப் பெற்று நாட்டையும், நாட்டு மக்களையும் அடகு வைக்க வேண்டாம் என்று கூறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவே இந்தக் கடன்களைப் பெற்றுள்ளார்.

நாங்கள் ஆட்சி அமைத்தால் இந்தக் கடன்கள் குறித்து சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

கடந்த பொதுத்தேர்தலில் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் வெளிநாடுகளுக்கு 73 ஆயிரம் ரூபா கடனாளியாக உள்ளனர் என ஐக்கிய தேசிய முன்னணி கூறியது. இந்தத் தொகை 95 ஆயிரம் ரூபாவாக, தற்போதைய கடனாக அதிகரித்துள்ளது.

நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள இக்கடன்களால் இலங்கை வங்கி, மக்கள் வங்கி உட்பட பல அரசு சொத்துக்கள் தனியாருக்கு விற்பனை செய்யப்படவுள்ளன. மேலும் சமுர்த்தி உட்பட பல சேமநலத்திட்டங்கள் நிறுத்தப்படும். ரோக்கியோ மாநாட்டின் மூலம் நாட்டுக்கு நன்மை பயக்காது என்றார்.

## திருமலையில் டெங்கு ஆபத்து சிறுமி ஒருவர் உயிரிழந்தார்!

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவர் உயிரிழந்ததையடுத்து - அங்கு, டெங்கு பரவும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகச் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உவர்மலையைச் சேர்ந்த சிறுமி ஒருவரே டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவராவார். இதையடுத்து உவர்மலைப் பகுதிக்கு மேலதிக சுகாதார அதிகாரிகள் அனுப்பப்பட்டு, அங்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, கந்தளாயில் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவனும் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு கடித்து 5 முதல் 7 நாள்களுக்குள் இந்த நோய் ஏற்படுவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சுகாதாரம் மூலம் சமாதானம்; ஜப்பானிய அமைப்பு முயற்சி!

சுகாதாரத் திட்டங்கள் மூலம் நாட்டில் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை ஜப்பானிய அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஏ.எம்.டி.ஏ. என்ற மருத்துவ அதிகாரிகள் அமைப்புடன் இணைந்தே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தவுள்ள ஏ.எம்.டி.ஏ. அமைப்பு 1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இவ்வமைப்பு ஐம்பதுக்கும் அதிகமான நாடுகளில், குறிப்பாக- இந்தியா, ஆப்கானிஸ்தான், கொசோவோ, எல்சல்வடோர், சம்பியா போன்றவற்றில் பணியாற்றி வருகின்றது.

நடமாடும் வைத்திய சேவைகளை நடத்துதல், சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பாடசாலை சுகாதார நடவடிக்கைகள், அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளுதல், பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை இந்த அமைப்பு மேற்கொள்ளவுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏ.எம்.டி.ஏ. அமைப்பு - சமூக புனர்வாழ்வுத்திட்டம் ஒன்றினையும் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதன்படி சனசமூக நிலையங்கள், நூலகங்கள், பகல்நேர குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் என்பன நிறுவப்படவுள்ளன.

அத்துடன்- மக்களுக்கு உளவியல், சமூக வழிநடத்தல்களை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் செயற்திட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் கடந்த மாதம் 30 ஆம் திகதி கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

# 100 மில்லியன் பெறுமதியான ஹெரோயின் சென்னையில் இலங்கையரிடமிருந்து மீட்பு!

### கைதான ஒருவர் தற்கொலை

நூறு மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை இலங்கைக்குக் கடத்த முயன்ற நால்வரைத் தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதையடுத்து விசாரணைகள் நடத்து கொண்டிருந்த போது, ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவது,

இலங்கைக்கு 4 கிலோ கிராம் ஹெரோயினைக் கடத்துவதற்குத் தயாராக இருந்த மூவரைத் தமிழகப் பொலிஸார் சென்னையின் புறநகர்ப் பகுதியான ஆலந்தூரில் வைத்துக் கைது செய்தனர். இவர்களிடமிருந்து ஹெரோயினும் மீட்கப்பட்டது.

இதையடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளில் மேலும் ஒரு வீட்டிலிருந்து 4 கிலோ கிராம் எடையுள்ள ஹெரோயின் மீட்கப்பட்டதோடு, அங்கிருந்த ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நால்வரும் விசாரணையின் பின்னர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படிருந்தனர்.

இரவு உணவு முடித்துக்கொண்ட அனைவரும் தூங்கிய பின்னர் - கைதானவர்களில் ஒருவரான சுரேஷ் என்ற இலங்கையர்-தடுத்து வைக்கப்பட்டிருந்த அறையில் இருந்த கொழுக்கி ஒன்றில் தனது சேட்டைப பயன்படுத்தி கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்துப் பொலிஸார் தீவிர விசாரணைகள் மேற்கொண்டுவருகின்றனர். இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 100 மில்லியன் ரூபா எனவும் கூறப்பட்டது.

# ஈழத்தமிழர் விவகாரத்தில் நிலைப்பாடு; இந்தியா மாற்றிக்கொள்ள வேண்டும்!

### ம.தி.மு.க.செயலாளர் வைகோ வேண்டுகோள்

(சென்னை)

ஈழத்தமிழர் விவகாரத்தில் மத்திய அரசின் கொள்கை மாற்றப்பட வேண்டும் என்று ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வைகோ கேட்டுள்ளார்.

பூந்தமல்லி பொடா நீதிமன்றத்துக்கு விசாரணைக்காகக் கொண்டு வரப்பட்டபோது செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு மறுபரிசீலனை செய்யப்படவேண்டும். இது தொடர்பாகப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா ஆகியோருக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன்.

புலிகள் - ரோக்கியோ மாநாட்டுக்குச் செல்லாதது துரதிர்ஷ்டவசமானது. இலங்கை அரசாங்கம் - புலிகள் கோருவது போன்று இடைக்கால நிர்வாக அமைப்பை வடக்கு - கிழக்கில் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

பொடா நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட வைகோவை, ஜூன் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க சிறப்பு நீதிமன்ற நீதிபதி இராஜேந்திரன் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் வைகோ சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி தினகரன்-தமது கட்சிக்காரரான வைகோ, நாடாளுமன்றத்தில் பேசியதையே திருமங்கலத்தில் பேசியதாகவும், இதற்கு எதிராகவே பொடா சட்டத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் அப்போது வாதாடினர்.

# வீதிப் பெயர்ப்பலகை, சுட்டுப்பலகைகளில் மும்மொழிகளுக்கும் சம அந்தஸ்து!

## நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி சபைகளுக்கு சுற்றறிக்கை

(நெல்லியடி)

வீதிப் பெயர்ப் பலகைகளையும், சுட்டுப்பலகைகளையும் அரச கரும மொழிகள் கொள்கைகளுக்கு இசைவாகத் தயாரிக்கும்படி - அரசகரும மொழிகள் ஆணைக்குழு சுற்றறிக்கை மூலம் சகல மாநகரசபைகளையும் மற்றும் நகர, பிரதேசசபைகளையும் கேட்டுக்கொண்டுள்ளது.

நகரங்களிலும், கிராமபுறங்களிலும் அமைக்கப்பட்டுள்ள வீதிப் பெயர் பலகைகளும், சுட்டுப்பலகைகளும் எழுத்துப் பிழைகளைக் கொண்டிருப்பதுடன், தவறான சொற்பிரயோகங்களையும் கொண்டுள்ளன. இதனால், பொதுமக்களுக்கு பெரும் சிரமங்களும், பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளதாகவும் அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அரச கருமமொழிக் கொள்கை முறையாகச் செயற்படுத்தப்படாமையால், நாட்டில் எழுந்துள்ள இனப்பிரச்சினை காரணமாகக் கடந்த இரு தசாப்தங்களாக மனித வளங்களும், பௌதீக வளங்களும் அழிக்கப்பட்டு நாட்டின் அபிவிருத்தியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது எனவும் -

அரச கருமமொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதன் ஒரு படியாக வீதிப் பெயர்ப்பலகைகளையும் மற்றும் சுட்டுப்பலகைகளையும் மும்மொழிகளிலும் சம அளவுள்ள எழுத்துக்களில் எழுதிப் பயன்படுத்தும்படியும் அச்சுற்றறிக்கையில் மேலும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரச கருமமொழிக் கொள்கையை செயற்படுத்துவதன் ஊடாக நாட்டின் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும், நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்கு உதவிபுரியும்படியும் இச்சுற்றறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (13)

# அரவுக்கு வந்த அதிர்ஷ்டம்

எதிர்பாராதவிதமாக எமக்கு ஒரு நன்மைக் காரியம் நடந்தால் அல்லது பொருள் ஏதாவது கிடைத்தால் அதை எமது அதிர்ஷ்டம் என்று மகிழ்வுறுகின்றோம். அதேவேளை, ஒரு தீமை நடந்தால் அல்லது எமக்குக் கிடைக்க இருந்த பொருளோ அல்லது பதவியோ கிடைக்காது விட்டால் அதை நமது துரதிர்ஷ்டம் என்கிறோம்.

யார் யாருக்கோ எதில் எதிலெல்லாமோ அதிர்ஷ்டம் அடிக்கின்றது. சீட்டிழுப்புகளில் பெருந்தொகைப் பணம் சிலருக்குக் கிடைக்கின்றது. அழகிய மனைவி, அதிகாரம் நிறைந்த பதவி என்பன சிலருக்கு எதிர்பாராதவிதமாக அமைந்து அவர் அதிர்ஷ்டசாலியாகின்றார். இவ்வாறு திடீர் அதிர்ஷ்டசாலியாகின்றவர் தலைகால் புரியாமல், மற்றவர்களை மதியாமல், மற்றவர்களைப் புறந்தள்ளி நடப்பதும் உண்டு. இவ்வகையான ஓர் அதிர்ஷ்டசாலிதான் திருவாளர் அரவு.

யார் இந்த அரவு என மலைக்காதீர்கள். நமது தாய்மொழியான தமிழ்மொழியிலுள்ள 247 எழுத்துக்களில் - சிலவற்றில் மட்டும் காணப்படும் ஓர் அடையாளமே இந்த அரவாகும். குறில் எழுத்துக்கள் சிலவற்றை நெடில் எழுத்து ஆக்குவதற்கு அக்குறில் எழுத்துக்களின் அருகில் இடப்பட்டு வந்த அடையாளமே இந்த அரவாகும்.

ஆரம்பகாலத்தில் க,ங,ச,ஞ,ட,த,ந,ப,ம,ய,ர,ல,வ,ழ ஆகிய 14 எழுத்துக்களையும் நெடில் எழுத்தாக்குவதற்காக மட்டுமே இந்த அரவு தமிழில் உருவானது. இடைக்காலத்தில் ஏற்பட்ட எழுத்துச் சீர்திருத்தத்தின் பயனாக எஞ்சிய ண,ள,ற,ன ஆகிய நான்கு எழுத்துக்களையும் நெடில் எழுத்தாக்குவதற்கு, அவற்றினருகில் இந்த அரவு உருவானது. ஆக இந்த அரவு (ா) என்பது ஒரு குறியீடே தவிர, ஓர் எழுத்தல்ல. இதற்கு விதிக்கப்பட்ட கடமை மேலே நாம் குறிப்பிட்டபடி "க" முதல் "ன" வரையான 18 எழுத்துக்களையும் நெடில் எழுத்தாக்குவது மட்டுமேயாகும்.

ஆனால், தற்போது இந்த அரவு அதற்குரிய கடமைகளை மட்டுமல்லாது, அதற்கு மேலேயும் சென்று யாரயாரோ வீட்டுமுற்றத்துள் எல்லாம் நுழைந்து அட்டகாசம் செய்கிறது. இதன் அட்டகாசத்தைக் கண்டும் காணாதவர் போலவும், கேட்டுங் கேட்காதவர் போலவும், அறிந்தும் அறியாதவர் போலவும் தமிழ் அறிஞர்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், பண்டிதர்களும் வாளாவிருக்கின்றனர்.

குறில் எழுத்தை நெடில் எழுத்தாக்குவதற்கு மட்டும் உருவாகிய இந்த அரவு, தற்போது பின்வருமாறு எல்லாம் உருமாறி தனக்குரித்தல்லாத பிறவேலைகளை எல்லாம் செய்துவருகின்றது. பின்வரும் அட்டவணையை நன்கு அவதானித்தால் இது நன்கு விளங்கும்.

| தற்போது உபயோகிக்கப்படும் எழுத்து வடிவம் | அதற்குரிய சரியான எழுத்து வடிவம் |
|---|---|
| ா்[ர்] | ர் |
| ாி[ரி] | ரி |
| ாீ[ரீ] | ரீ |

பெரும்பான்மையோர் செய்தால் எந்தத் தவறும் ஏற்கப்பட்டுச் சரியென நியாயப்படுத்தப்படும். இவ்வுலகிலே இந்த அரவு (ா) பிரச்சினையும் சரியென்றாகி, எவராலும் கவனிக்கப்படாமலேயே போய்விட்டது. தமிழ் ஆர்வலர்களும், அறிஞர்களும், பேராசிரியர்களும் மட்டுமல்லாது - பிரசுர நிலையங்கள், பத்திரிகைகள், பாடசாலை ஆசிரியர்கள் யாவரும் ஒருமித்து ஒத்துழைத்தாலேதான் இந்தத் தவறு திருத்தப்படமுடியும்.

அச்சு எழுத்துக்களில் ா்,ாி,ாீ என மட்டுமே எழுத்து அச்சுக்கள் செய்யப்பட்டிருந்ததால், அச்சுருவில் வந்த அனைத்து ஆக்கங்களிலும் இவ்வாறு பிழையாக வழங்கி வந்தது. ஆனால், தற்போது அநேகமாகக் கணினி மூலமாகவே அச்சு வேலைகள் நடைபெறுவதால், இனி வருங் காலங்களில் இந்தத் தவறுகள் திருத்தப்படலாம், திருத்தப்பட வேண்டும்.

அச்சிலே சரியான வடிவம் வந்துவிட்டால், அது நாளடைவில் கையெழுத்திலும் பரவி விரைவில் இந்த அரவு தன் கொட்டத்தை இழந்து தனக்குரிய பணியை மட்டும் செய்ய வைக்கமுடியும். அனைத்துத் தரப்பினரும் இதற்கு ஒத்துழைப்பார்களா?

**செ.சுதாகரன், மட்டுவில் வடக்கு.**

# சின்னஞ்சிறு செய்திகள்

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெளிக்கிழமை தோறும் நடைபெறும் வாராந்த நிகழ்வில், நாளை மு.ப. 10.30 மணிக்கு மாணவர் உரையரங்கம் நடைபெறும்.

## தாபரிப்பு பணம் செலுத்தாதவருக்கு ஆறுமாத சிறை

மனைவிக்கு மூன்று தவணைக்ளுக்குரிய தாபரிப்புப் பணத்தினைக் கட்டத்தவறிய ஒருவருக்கு - யாழ். மாவட்ட நீதிமன்றத்தினால் ஆறுமாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மூன்று மாதத்திற்குரிய தாபரிப்புப் பணமாக 3000 ரூபாவினைச் செலுத்தத் தவறிமைக்காகவே, அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவருக்கு யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்கினராஜா ஆறுமாதச் சிறைத்தண்டனை விதித்தார்.

## மருதனார்மடம் சந்தையில் மலசலகூடங்கள்

மருதனார்மடம் சந்தையில் நீண்டகாலக் குறைபாடாக இருந்துவந்த மலசலகூட வசதியீனம் தற்பொழுது சீர்செய்யப்பட்டு வருகின்றது. உடுவில் உப அலுவலகம் தனது நிதியிலிருந்து இரண்டு புதிய மலசலகூடங்களை இங்கு அமைக்கத் திட்டமிட்டு, அதற்கான வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (101)

## மழலைகள் பூங்கா விளையாட்டுப் போட்டி

குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலைய மழலைகள் பூங்கா விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் - நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக- யாழ். மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வவிநாயகர், வண. விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## தேர்த்திருவிழா

சரித்திரப் பிரச்சித்தி பெற்ற தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த உற்சவ தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும்.

மாலை 3 மணிக்கு அம்பாள் வீதி வலம் வந்து, தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

# வெளிமாவட்டங்களில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு இடமாற்றம்!

## கல்வி அமைச்சு தீர்மானம்

(ஆழியவளை)

வெளிமாவட்டங்களில் நியமனம் பெற்ற - கல்விக் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய 168 ஆசிரியர்களுக்கும் வடக்கு-கிழக்கில் கடமை புரிவதற்கு, கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் 6000 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளபோது, இம்மாவட்டங்களைச் சேர்ந்த மேற்படி ஆசிரியர்களை வெளிமாவட்டங்களில் நியமித்தமை பாரபட்சமான ஒரு நடவடிக்கை எனக் கல்வி அமைச்சரிடம் சுட்டிக்காட்டியதை அடுத்து, இடமாற்றம் வழங்குவதற்கு அமைச்சர் முன்வந்ததாக- தமிழர் ஆசிரிய சங்கத்தினரும், தமிழ்த் தேசிய கூட்டமைபபினரும் தெரிவித்தனர். மேற்படி ஆசிரியர்கள் விரும்பும் பட்சத்திலேயே இடமாற்றம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது (122)

# விடுமுறையில் சென்ற கடற்படைச் சாரதி ரத்கமவில் வைத்துச் சுட்டுக்கொலை!


(கொழும்பு)

காலி - ரத்கமவில் கடற்படைச் சாரதி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடற்படைத் தலைமையகத்தில் சேவையாற்றிய அஜீத்குமார (24 வயது) என்ற சிப்பாயே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

விடுமுறையில் வீடு சென்றிருந்த இவர், வீட்டிலிருந்து சைக்கிளில் கடைக்குச் சென்றுவிட்டுத் திரும்பும்போது, இனந்தெரியாதோர் இருவர் இவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர். கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கு மரணமானார்.

தனிப்பட்ட குரோதத்தில் இக்கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவருகின்றது.



வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலய அதிபர் பொ.அருணகிரிநாதனுக்கு நடத்தப்பட்ட பாராட்டுவிழாவில்- விழா மலரை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை தலைவர் என். சின்னத்தம்பி வெளியிட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். (116)



அண்மையில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற குருத்துவ அபிஷேக நிகழ்வில், குருக்களாகத் திருநிலைப்படுத்தப் பட்ட குருவானவர்களைப் படத்தில் காணலாம். (119)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் சுகாதார அதிகாரிக்கு பணிமனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வைத்தியசாலையில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையொன்றைப் புதிதாக நிர்மாணிக்க 'நீப்' உதவி அமைப்பு 55 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக் காணியினுள் அமைக்கபபடவுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கான கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனினும், இக்கட்டடம் தற்காலிகமாகச் சிகிச்சை விடுதியாகப் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சி பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரினால் சாவகச்சேரி வைத்தியசாலை முற்றாக அழிந்தநிலையில், தற்போது அடிப்படைவசதிகள் எதுவுமற்ற நிலையில் - இடவசதி பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (34)

# வெள்ள நிவாரணப்பொருட்கள் தனியார் கடைகளுக்கு விற்பனை

(கொழும்பு)

அண்மையில் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணத்தில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்குவதற்கெனப் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுப் பொது அமைப்புக்களால் சேகரித்து அனுப்பப்பட்ட உலர் உணவுப்பொருட்கள் -

தனியார் வர்த்தகர்களுக்கு விற்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு விற்கப்பட்ட உலர் உணவுப்பொருட்கள் மிகவும் மலிவான விலையில் விற்கப்பட்டு வருகின்றன. 115 ரூபா விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்ட பால்மா பக்கற்றுக்கள், 50 ரூபாவுக்கு தனியார் வர்த்தக நிலையங்களால் விற்கப்படுகின்றன.

இந்தகைய மோசடிகள் திட்டமிட்ட அடிப்படையில் குழுக்களாக மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# விவாதச் சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலை அணிக்கு முதலிடம்

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் பவளவிழாவையொட்டி அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்குமிடையில் நடத்திய விவாதச் சுற்றுப்போட்டியில் - யாழ். பல்கலைக்கழக அணி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி நடந்த இப்போட்டியில்- யாழ்.பல்கலைக் கழகம் சார்பில் கி.ஐங்கரன், க.ஜெசிதரன், கு.கிரிசன் ஆகியோரைக் கொண்ட அணியே முதலிடத்தைப் பெற்றது.

சிறந்த பேச்சாளராக கி.ஐங்கரன் தெரிவு செய்யப்பட்டார். இந்த விவாதப்போட்டியில் - யாழ்ப்பாணம், ரஜரட்டை, ஜெயவர்த்தனபுர, கொழுமபு, பேராதனை, மொரட்டுவ, தென்கிழக்கு பல்கலைக்கழகங்கள் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

# ஜெருசலேமில் தற்கொலைத் தாக்குதல்; பதினாறு இஸ்ரேலியர்கள் பலியாகினர்!

## ஹமாஸ் தலைவர் மீதான தாக்குதலுக்குப் பழிக்குபழி

இஸ்ரேலில் - ஜெருசலேமில் பலஸ்தீனர் ஒருவர் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில், பதினாறு இஸ்ரேலியர்கள் பலியாகினர்.

பழமைவாத யூதர் ஒருவர் போல உடையணிந்து வந்த, பலஸ்தீனப் போராளி ஒருவர் - ஜெருசலேமின் நகர மத்தியில் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றில், தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கவைத்து - அந்த பஸ்தைத் தகர்த்தார்.

மாலை நேரத்தில் - சனநடமாட்டம் அதிகமாயிருந்த சமயத்தில் இந்த குண்டுவெடிப்பு நடந்தது.


பஸ்ஸிலிருந்த பத்துப்பேரும் தற்கொலைப்படையாளியும் பலியானதோடு, வீதியில் சென்றுகொண்டிருந்த மேலும் எழுவரும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நடந்ததும் - மக்கள் செய்வதறியாது திகைத்து ஓடியதாகவும் - பலர் நெரிசல்களுக்குள் சிக்கிக் காயமடைந்ததாகவும், சம்பவத்தை நேரில் கண்டோர் கூறுகின்றனர்.

தாக்குதல் நடந்த பஸ் - அதன் முன்புறமும், பக்கவாட்டுப் பகுதிகளும் முற்றாகச் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது.


இத்தாக்குதல் - இஸ்ரேலியர்களிடம் கோபத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தியிருப்பதாக, இஸ்ரேல் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - ஹமாஸ் இயக்கத் தலைவர் என்ரிசி மீது, இஸ்ரேலிய ஹெலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே, இந்தத் தற்கொலைக் குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.



தாக்குதலுக்கிலக்கான பஸ்

### புலனாய்வு விசாரணைக்கு கொங்கிரஸ் எதிர்ப்பு!




ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதான பொய்யான தகவல்களினடிப்படையில், அமெரிக்கா போரை ஆரம்பித்ததான குற்றச்சாட்டுப் பற்றிய விசாரணையை மேற்கொள்ளத்தேவையில்லை என அமெரிக்க கொங்கிரஸ் அறிவித்துள்ளது.

இவ்வாறான ஒரு விசாரணை - அமெரிக்கப் புலனாய்வுச் சேவைகளைத் தளர்வடையச் செய்யுமென அமெரிக்க கொங்கிரஸ் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களான - ஜனாதிபதி புஷ்ஷின் குடியரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

அமெரிக்காவின் பிரதான புலனாய்வுச் சேவையான சி.ஐ.ஏ. இது தொடர்பான விசாரணைகளை தனது தரப்பிலிருந்து மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஈரானைச் சேர்ந்த ஒட்டிப்பிறந்த சகோதரிகளான லிடானும், லாலே பிஜானாவும் - சிங்கப்பூரிலுள்ள வைத்தியசாலையொன்றில் - இருவரும் தனித்தனியே பிரிப்பதற்கான சத்திரசிகிச்சைக்கு அடுத்தமாதம் உட்படுத்தப்படவிருக்கின்றனர். அதற்கு முன் நிருபர்களிடம் பேசும் சகோதரிகளைப் படத்தில் காணலாம்.

# காஸாவில் இஸ்ரேல் பதிலடி; ஒன்பது பலஸ்தீனர் உயிரிழப்பு!

## புனிதப் போருக்கு மக்கள் பிரகடனம்

இஸ்ரேலில் ஜெருசலேமில், தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட சில மணிநேரங்களில் - காஸா பகுதியில் பலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேலியர்கள் ஏவுகணைகளாலும், ஹெலிகளாலும் நடத்திய தாக்குதலில் - 9 பேர் கொல்லப்பட்டனர்.


முதலில் - இஸ்ரேலியத் தாக்குதல் ஹெலிகள் - காஸாவில் காரொன்றின் மீது நடாத்திய தாக்குதலில்- அக்காரில் சென்றுகொண்டிருந்த இருவரும், வீதியில் சென்று கொண்டிருந்த மேலும் ஐவரும் கொல்லப்பட்டனர்.

இதன்பின்னர் - காஸாப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய எறிகணைத தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

யூதக்குடியேற்றம் ஒன்றின் மீது பலஸ்தீனப் போராளிகள் மோட்டார் தாக்குதலொன்றை நடத்த முற்பட்ட சமயம், தாம் முந்திக்கொண்டு தாக்கியதாக இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.



எரிகிறது கார்



காஸாவில் விண்ணை முட்டும் புகைமூட்டம்

ஆனால் - இத்தாக்குதலில் அப்பாவி மக்களே பலியானதாக பலஸ்தீனப் போராளிகள் பதிலளித்துள்ளனர்.

காஸாப் பகுதியில், சில தினங்களுக்கு முன்னர் - ஹமாஸ் இயக்கத் தலைவர் அப்துல் அசீஸ் அல்-என்ரிசி மீது, இஸ்ரேலியவாசிகள் நடாத்திய தாக்குதலில் அவர் மயிரிழையில் உயிர்தப்பியதைத் தொடர்ந்து - அங்கு பெரும் பதற்றம் நிலவிவரும் நிலையில் - இப்புதிய தாக்குதல்கள் நடந்துள்ளன.

இத்தாக்குதல்களால் - கோபமடைந்த பலஸ்தீனர்கள் - வீதிகளுக்கு வந்திறங்கி, தம்முடைய புனிதப் போர், இஸ்ரேலுக்கு எதிராகத தொடரும் என முழங்கப்பட்டதாக, அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

# பதினாறு வயது மாணவியை கடத்திய பாலியல் குற்றவாளி

## பிரிட்டனில் பெரும் பரபரப்பு

பிரிட்டிஷ் பொலிஸாரால் - பாலியல் வல்லுறவுக் குற்றவாளி எனத் தண்டிக்கப்பட்ட நபரொருவர் - பதினாறு வயதுடைய பள்ளி மாணவியைக் கடத்திச் சென்றுள்ளதால் - அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கைலே குயின் என்ற இந்தப் பதினாறு வயது மாணவியை, 23 வயதான பார்ட்ரன் என்ற நபரே கடத்திச் சென்றிருக்கிறார்.

பார்ட்ரன் - ஏற்கனவே 92 வயதான வயோதிபப் பெண்ணொருவரைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய சம்பவத்தில், குற்றவாளியாக இனங்காணப்பட்டு, ஆறு வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட பெண் கடத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் - அவர், பார்ட்ரனுடன் காதல்வயப்பட்டிருந்ததாக இன்னொரு தகவல் தெரிவித்தது.

எனினும் - பதினாறு வயது மாணவியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமக்கிருப்பதாக, பிரிட்டிஷ் பொலிஸார் கூறுகின்றனர்.

பார்ட்ரன், உளவியல் பாதிப்புள்ளவர் என்றும் - இவர் 92 வயது வயோதிபப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியபோது அவருக்கு வயது 15 எனவும் பிரிட்டிஷ் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உலகவலம்

# இந்தோனேஷியாவில் மனிதப் புதைகுழி; கடும் சண்டை நடுவே பதற்றம் நிலவுகிறது!

இந்தோனேஷியாவின் அசே மாகாணத்தில் - போராளிகளுக்கும், அரச படையினருக்குமிடையே கடுமையான மோதல்கள் நடைபெற்று வருகின்ற நேரத்தில் - அங்கு பெரும் மனிதப் புதைகுழி ஒன்று, சுயாதீன மனித உரிமைவாதிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

அசே மாகாணத்தில் - கடந்த சில வாரங்களாக தீவிரமான சண்டைகள் இடம்பெற்ற பெரூன் பகுதியில், இந்தப் புதைகுழி இனங்காணப்பட்டிருக்கிறது.



இந்தோனேஷியப் படைகள்

டசின் கணக்கான சடலங்கள் அங்கு புதைக்கப்பட்டிருப்பதாக - சுயாதீன மனித உரிமைக் குழுவின் உறுப்பினரான எம்.எம். பில்லா என்பவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு தரப்பினரதும் சண்டைகளின்போது, மோசமான வகையில் மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும், பொதுமக்கள் கொல்லப்படுதல் - பாலியல் வல்லுறவுகள் பெருந்தொகையளவில் இடம்பெற்றதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில் - இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது, இப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

# தேரேறி வலம் வருவாய்!



இன்று புனித அந்தோனியார் உற்சவம் சிறப்புறக் கொண்டாடப்படுகிறது.

அற்புதங்கள் பல புரிந்த
அந்தோனி எனும் நாமம்
அனுதினமும் அடியவர்கள்
அர்ச்சிக்கும் திருநாமம்

வீசுகின்ற தென்றலொடு
பொங்கி வரும் கடலலையும்
நின் புகழைப் பாடிடவே
தேரேறி வலம் வருவாய்

கோடி வரம் நாம் கேட்டு
கை கூப்பி தாழ் பணிய
கரம் தாங்கும் பாலனிடம்
பரிந்துரைத்து அருள் தருவாய்

நோய் பிணிகள் உள்ளோரை
நேயமுடன் அரவணைத்து
நலமுடனே அவர்வாழ
ரதமேறி நீ வருவாய்

அடியவர்கள் வடம்பிடிக்க
செபஸ்தியுடன் கூடவந்து
நாற்றிசையும் அருள் பொழிந்து
நல்வாழ்வு நீ தருவாய்

போர் ஓய்ந்து அமைதிவர
பேச்சு வார்த்தை வெற்றிபெற
அன்புறவில் நாம் வாழ
அருள் மாரி பொழிந்திடுவாய்.

இ.அ.அமலரட்ணம்
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புளொட் மோகனைக் குறிவைத்த புலிகளே தெஹிவளையில் பிடிபட்டனர்!

## விசாரணை நடத்தும் பொலிஸார் கூறுகின்றனர்

(கொழும்பு)

தெஹீவளைப் பாலத்தடியில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட புலிகள் - இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்படும், புளொட் மோகன் என்பவரைக் குறிவைத்தே வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து பொலிஸார் மேலும் தெரிவிக்கையில் -

கைது செய்யப்பட்ட நபர்கள் பயணம் செய்த ஓட்டோவிலிருந்து- புளொட் மோகனின், பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப் படங்களும், புலிகளின் மட்டக்களப் புப்பகுதி புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் ரமணன் எழுதிய கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டது.

அத்துடன், இவர்களிடம் இருந்து பிஸ்ரல் ஒன்றும் 15 ரவைகளும் கைப்பற்றப்பட்டன. புளொட் மோகன் தெஹிவளை கடற்கரையில் காலை நேரத்தில் உடற்பயிற்சி செய்வது வழக்கமென்றும், இதன்போதே - இவரைக் கொல்லத் திட்டமிடப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் வைத்து பொலிஸார் சோதனையிட முனைந்த போது, மட்டக்களப்பைச் சேர்ந்த வில்மராஜா என்பவர் சயனைட் அருந்தினார்.

இவர் களுபோவில வைத்திய சாலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இதேவேளை - இவருடன் ஓட்டோவில் பயணம் செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரமுத்து நித்தியானந்தன் என்பவரும், ஓட்டோ சாரதியும் கைது செய்யப்பட்டனர். நித்தியானந்தனிடம் இருந்தே பிஸ்ரல் ஒன்றும் மீட்கப்பட்டது.

இவர் கொட்டாஞ்சேனையில் உள்ள தியேட்டர் ஒன்றில் கடந்த நான்கு வருடங்களாகப் பணியாற்றி வந்துள்ளார். வில்மராஜா கொழும்பு வந்து 1லட்சத்து 40ஆயிரம் ரூபாவுக்கு ஓட்டோ ஒன்றை வாங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சிறிசேன கூரேயின் நெருங்கிய சகாவின் வீட்டில்

# நேற்றிரவு கிரனைட் வீச்சு; திருமலையில் மூவர் காயம்!

(திருகோணமலை)

திருகோணமலை உவர்மலைப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது, நேற்றிரவு நடந்த கைக்குண்டுத் தாக்குதலொன்றில் மூவர் காயமடைந்தனர்.

நேற்றிரவு 8.15 மணியளவில் உவர்மலை மத்திய வீதியிலுள்ள வீடொன்றின் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் முக்கியஸ்தரான சிறிசேன கூரேயின் நெருங்கிய சகாவும், கூரேயின் பிரஜைகள் முன்னணியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவருமான விஸ்வநாதன் என்பவரது வீட்டின் மீதே, கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தில் விஸ்வநாதன், அவரது மனைவி உட்பட மூவர் காயமடைந்தனர்.

இவர்கள் மூவரும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து அப்பகுதியில் பெருமளவு இராணுவத்தினரும், பொலிஸாரும் நேற்றிரவு குவிக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது.

(04)

## படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர்

# காணாமற்போன எனது மகன் எங்கே? வவுனியாவில் தந்தை உண்ணாவிரதம்!

(வவுனியா)

வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் முன்பாக, படையினரால் கைது செய்யப்பட்டுக் காணமற்போன ஒருவரின் தந்தையார், நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அக்கராயனைச் சேர்ந்த எஸ். பரமசிவம் என்பவரே, இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் விடுதலைப் புலிகளின் கட்டுபபாட்டுப் பிரதேசமான அக்கராயனிலிருந்து, வியாபார நோக்கம் கருதி வவுனியா வந்திருந்த பரமசிவம் சந்திரநிவாஸ் (வயது 33) என்பவர், படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற் போயிருந்தார்.

இளம் குடும்பஸ்தரான தனது மகன் பற்றிய தகவலைப் பெற்றுத் தருமாறுகோரி - தந்தையார், மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ நிலையம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றில் முறைப்பாடு செய்திருந்தார்.

காணாமற்போன மகன் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்காததால் மனமுடைந்த இவர், கடந்த வருடமும் இதுபோன்ற போராட்டம் நடத்தியிருந்தார். ஆனால் காணமற்போன இவரது மகனின் விபரங்களை ஒரு மாத காலத்துக்குள் பெற்றுத்தருவதாக, வவுனியா அரச அதிபரால் உறுதி கூறப்பட்டதைத் தொடர்ந்து, இவர் தனது உண்ணாவிரதத்தைத் கைவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (03)

### கை துண்டாடிய...

சுமார் ஐநூறு மீற்றர் தூரத்தில் துண்டிக்கப்பட்ட இவரது கையும், கத்தி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன.

நேற்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் காரணமாக மருதனார்மடம் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கத்தி வெட்டுக்குட்பட்ட மேற்படி நபர், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வரதர் அணியைச் சேர்ந்தவர் என்று தெரிய வருகிறது. (78,68)

### வெள்ளை வான்...

றிற்கு சிறுவனை அழைத்துச் சென்று - தடிகளாலும், எஸ்லோன் குழாயினாலும் கடுமையாகத் தாக்கியுள்ளார். இதனால் சிறுவன் முகத்திலும் உடலின் பல பாகங்களிலும் கடும் காயத்திற்கு உள்ளாகினான்.

பின்னர் - ஒரு மணித்தியாலத்தின் பின்னர், அச்சிறுவனை அவரது வீட்டில் இறக்கிவிட்டு, மேற்படி வெள்ளை நிற ஹையேஸ் வாகனம் வேகமாகத் தப்பிவிட்டது.

இதனால், அச்சமடைந்த சிறுவனின் தாயார் நேற்று காலை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறையில் முறைப்பாடு செய்ததுடன், யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி முஸ்லிம் வர்த்தகரின் வீட்டில் வளர்க்கப்பட்டுவந்த புறா காணாமற்போன சம்பவம் தொடர்பாக ஏற்பட்ட தகராறு காரணமாகவே, இச்சிறுவன் மீது இவ்வாறு மோசமான தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. (லி)

## பின் கதவால் உள்நுழைந்த

# மாகாணசபை உறுப்பினர்கள் 33 பேர் பதவிகளை இழப்பர்!

(கொழும்பு)

மாகாண சபைகளின் உறுப்பினர்களைப் புதிதாக நியமிக்கும்போது, தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பித்த பட்டியலில் இல்லாதோரை நியமித்தது சட்டவிரோதமானது என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு இணங்க, 33 மாகாணசபை உறுப்பினர்கள் பதவிகளை இழக்கலாம் என்று சொலிசிட்டர் ஜெனரல் சீ.ஆர்.டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான தீர்ப்பைத் தெரிவிக்குமாறு - தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்றைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்பிரகாரம் - ஐக்கிய தேசிய முன்னணியின் மாகாணசபை உறுப்பினர்கள் 13 பேரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் 12 பேரும், மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து 7 பேரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலிருந்து ஒருவருமாக 33 பேரே பதவி இழக்கவுள்ளனர்.

# தேனீர்க் கடை மீது கிரனைட் வீச்சு நான்கு முஸ்லிம்கள் காயம்!

## வாழைச்சேனையில் நேற்றுக்காலை சம்பவம்

(கல்முனை)

மட்டக்களப்பு - வாழைச்சேனையில், தேனீர் கடையொன்றின் மீது கிரனைட் வீசப்பட்டதில் - நான்கு முஸ்லிம் மக்கள் காயமடைந்தனர்.

நேற்றுமாலை வாழைச்சேனை பழைய பஸ் நிலையத்திற்கு அண்மையில் இருந்த தேனீர்க் கடையின் மீதே கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில், தேனீர்க் கடையில் தேனீர் அருந்திக் கொண்டிருந்த நான்கு முஸ்லிம் மக்களே காயமடைந்தனர். இவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (07)

### மட்டு - அம்பாறை ...

நடைபெறாதிருக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும், இந்தப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

இரு மாவட்டங்களிலும் -அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்று மூடப்பட்டிருந்தன. அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை. பாடசாலைகள், அரச அலுவலகங்களில் வழமையான செயற்பாடுகள் நடைபெறவில்லை.

வாழைச்சேனை, செங்கலடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் சந்தைகள் இயங்கவில்லை. கிழக்கு பல்கலைக் கழகம் உட்பட உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும் இடையிலான போக்குவரத்து எதுவும் நடைபெறவில்லை. மண்முனை, அம்பிளாந்துறை என்பவற்றுக்கு ஊடான படகுச் சேவைகளும் நேற்று நிறுத்தப்பட்டிருந்தன.

பிரதான வீதிகளில் ஆங்காங்கே ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டிருந்தன.

அதேவேளை - மட்டு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த காலங்களைவிட, நேற்று நடைபெற்ற ஹர்த்தாலில் - முஸ்லிம் மக்களும் பங்குகொண்டு ஹர்த்தாலுக்குப் பெருமளவில் ஒத்துழைத்ததாக - அங்கிருந்து எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார். (07)

### வெளிநோயாளர்...

தும் அரசாங்க வைத்திய அதிகாரிகளாகப் பணிபுரியும் மருத்துவர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்களும் பங்கேற்றுள்ளனர்.

இதனாலேயே நேற்றும், மூன்றாவது நாளாக சத்திர சிகிச்சைகள், அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் எதுவும் இடம்பெறவில்லை. எனினும், வெளிநோயாளர் பிரிவில் ஆறு வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு மாத்திரம் சிகிச்சையளிக்கப்பட்டது.

(லி)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான் நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.97 | 97.39 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 161.46 | 162.91 |
| 1 யூரோ | 113.56 | 114.87 |
| 1 சுவிஸ் பிராங் | 73.70 | 74.92 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.93 | 65.08 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.93 | 25.93 |

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

RAMCO CEMENT

ராம்கோ சீமெந்து

SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது

ஆசியாவில் முதலாம்தர (நம்பர் - 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் RAMCO சீமெந்து (கோபுரம் மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு : தற்போது ராம்கோ சீமெந்து பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டுக்கொண்டுள்ளது.

எமது நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட பார ஊர்திகளை இன்று காலை 06.00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முன் கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்.

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்கள்
ஈஸ்வரபகவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P. No - 021 222 2350

(சி-1083)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.